பக்கங்கள்: 11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 05 வெள்ளிக்கிழமை 22.10.2021 கதிர் 351

## இனிது ரகசியம் அல்ல!

நேற்றைய எனது பதிவில் தலைநகர் கொழும்பின் முக்கிய தமிழ் அரசியல் பிரமுகரான மனோ கணேசன் எம்.பி. – அவரது சகோதரர் பிரபா கணேசன் சந்திப்புக் குறித்து எழுதியிருந்தேன்.

அது தொடர்பில் மறுப்புக் குறிப்பு ஒன்றை தமது ☞ 2

## அமைச்சுக் கூட்டத்துக்குப் 'புலி' வந்ததால் கூட்டமைப்பின் எம்.பிக்கள் வெளிநடப்பு!

வன ஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு சார் ஆலோசனைக்குழுக் கூட்டத்தில் 'புலி' வந்ததால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வெளிநடப்பு செய்தனர்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று வன ஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு சார் ஆலோசனைக் குழுக் கூட்டம் அமைச்சர் சி.பி ரத்நாயக்க தலைமையில் நடைபெற்றது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ்.மாவட்ட எம்.பியான சி.சிறிதரன், வன்னி மாவட்ட எம்.பியான சார்ள்ஸ் நிர்மலநாதன், மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான இரா.சாணக்கியன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இக்கூட்டத்தில் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரல்படி விடயங்கள் முன்னெடுக்கப்படாமல் வேறு விடயங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டு விவாதிக்கப்பட்டிக் கொண்டிருந்தன. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் அமைச்சருக்குச் சுட்டிக்காட்டிய போதும் அது கவனத்தில் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில், ☞ 10

## 12 பேர் சாவு; 552 பேருக்கு கொரோனா!

இலங்கையில் மேலும் 12 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் ☞ 10

# வடமராட்சி மீனவர்கள் இருவர் இந்தியக் கடற்படையால் கைது

## எல்லை தாண்டி தொழிலில் ஈடுபட்டனர் என்று குற்றச்சாட்டு

(ந.லோகதயாளன்)

இந்திய எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் மீனவர்கள் இருவரை இந்தியக் கடற்படையினர் நேற்றிரவு கைது செய்துள்ளனர்.

வடமராட்சிப் பகுதியிலிருந்து ஒரு படகில் மீன் பிடிக்கச் சென்ற இரு மீனவர்களே இந்தியக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு நாகபட்டினம் துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இருவரும் நாகபட்டினம் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று இந்தியத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. ☞ 10

## அடி முறையைத் தடை செய்யுங்கள்!

### இழுவை மடி மீன்பிடி முறையை விஞ்ஞான முறைப்படி அனுமதியுங்கள் என்று சிவாஜிலிங்கம் வேண்டுகோள்

(இ.கலையமுதன்)

அடி முறையைத் தடை செய்யுங்கள்; இழுவை மடி மீன்பிடி முறையை விஞ்ஞான முறைப்படி அனுமதியுங்கள் என்று தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்

வல்வெட்டித்துறையில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய – இலங்கை இடையிலான கடல் எல்லையில் நடைபெறுகின்ற பிரச்சினைகள் ஆண்டாண்டு காலமாக இந்தப் பகுதியில் இருந்த போதிலும் இழுவைப் படகுகள் வந்ததன் பின்பு பிரச்சினைகள் ஆரம்பித்தன.

இழுவைப் படகுகள் ☞ 10

## இந்திய மீனவரின் சடலம் இன்று பகல் தமிழகத்துக்கு

(ந.லோகதயாளன்)

யாழ். காரைநகர் கடற்பரப்பில் கடந்த 18ஆம் திகதி உயிரிழந்த இந்திய மீனவரின் உடல் இன்று காங்கேசன்துறை ஊடாகத் தமிழகத்துக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

காரைநகர் – கோவளம் பகுதிக்குள் 18ஆம் திகதி ஊடுருவிய இந்திய மீனவரின் படகு கடற்படையினரின் படகுடன் மோதியதில் இந்திய மீனவரின் படகு முழுமையாகக் கடலில் மூழ்கியது.

இதன்போது இரு இந்திய மீனவர்கள் மீட்கப்பட்ட ☞ 10

## யாழில் பலரையும் சந்திக்கும் ஆளுநர்



(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண புதிய ஆளுநர் ஜீவன் தியாகராஜா, யாழ். குடாநாட்டில் பலரையும் சந்தித்து தற்போதைய நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடி வருகின்றார்.

நேற்று யாழ்.மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, ☞ 10

## வீடு புகுந்து அட்டூழியம்;

### ஓட்டோ சாரதி உள்ளிட்ட மூவர் வசமாக சிக்கினர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்.,கோப்பாய் பூதர்மடம் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் வாள்கள், கூரிய ஆயுதங்கள் மற்றும் பிசுங்காண் போத்தல்களுடன் புகுந்த அட்டூழியத்தில் ஈடுபட்ட கும்பலைச் சேர்ந்த இருவர் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் ☞ 10

## சகல ஆரம்பப் பாடசாலைகளும் திங்கட்கிழமை முதல் ஆரம்பம்

நாட்டில் ஆரம்பப் பாடசாலைகள் அனைத்தினதும் கல்வி நடவடிக்கைகளை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்க சுகாதார அமைச்சால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இதற்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் அனுமதி பெறப்பட்டுள்ளது எனக் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா நேற்று தெரிவித்தார். ☞ 10

## இலங்கையில் கறுப்பு பூஞ்சை முதலாவது சாவு

இலங்கையில் முதற்தடவையாக கொரோனா நிமோனியாவுடன் தொடர்புடைய கறுப்பு பூஞ்சை தொற்றுக்குள்ளான ஒருவர் மரணமடைந்துள்ளார். இது நாட்டில் கறுப்பு பூஞ்சை ☞ 10

Science For Technology (SFT)
A/L 2023
புதிய பிரிவுகள் ஆரம்பம்
A/L 2021, 2022
மாணவர்களுக்கான துரிதமீட்டல் மற்றும் Past Paper Class
(குறுகிய காலத்தில் A தர சித்தியை அடைவதற்கு)
✓ குழுவாகவும் / தனியாகவும் கற்கலாம்
✓ நேரடி வகுப்பு மற்றும் ZOOM
மதுசுதன் M.Sc
077 907 3773

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முகப் புத்தக வலைத் தளத்தில் வெளியிட்டுள்ள மனோ கணேசன் எம்.பி., அதனைத் தமது மறுப்பாகப் பிரசுரிக்கும்படியும் கோரியுள்ளார். மறுப்பை பிரசுரிக்கக் கோருவது அவரது உரித்து. அதைப் பிரசுரிக்க வேண்டியமை நமது கடப்பாடு. அதற்கு முன்னர் சில குறிப்புகள்.

மிலேனியத்தின் முதல் தசாப்தத்தில் – இருண்ட யுக காலத்தில் – தமிழர்களுக்கு எதிராக மிகக் கொடூரமான அராஜகங்கள் அரங்கேறிய போது – நமது மக்களுக்காகத் தலை நகரில் இருந்து துணிச்சலுடன் குரல் கொடுத்தவர்கள் ஒரு சிலர் தான். அப்போதும் வெளிப்படையாகவும், பட்டவர்த்தனமாகவும், நீதிக்காகவும், நியாயத்துக்காகவும், சுதந்திர உரிமைக்காகவும் குரல் எழுப்பியவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். மனோ கணேசன் எம்.பி., மகேஸ்வரன் எம்.பி. போன்றோர் அரசியல்வாதிகளாக அப்பணியை ஆற்றினர் என்றால், தலைநகரில் 'சுடர்ஒளி' ஆசிரியராகவும், வடக்கில் 'உதயன்' ஆசிரியராகவும் ஒரே சமயத்தில் அதே விடயத்தை நானும் பேனா மூலம் குறிப்பிடத்தக்க துணிச்சலுடன் கையாண்டேன் என்பேன்.

அந்த வகையில் ஒற்றுமைப்பட்டு, பல விடயங்களை நாம் முன் நகர்த்தினோம். இருவருமே ஒரே விதமான அச்சுறுத்தலை எதிர்கொண்டோம். எங்கள் பணியில் – எங்கள் இலக்கில் – அப்போது ஒரு புரிதல் இருந்தது. சேர்ந்து பல விடயங்களை முன்நகர்த்தினோம். இருவருமே சர்வதேச சமூகத்தை வெவ்வேறு தளங்களில் கையாண்டோம். அச்சுறுத்தல் மிகுந்த பணியாயினும் அதன் பசுமையான நினைவுகள் இன்றும் உண்டு – பன்னிரண்டு ஆண்டுகள் கடந்த பின்னரும்.

அந்த அச்சுறுத்தல் காலமும், அது ஏற்படுத்திய பீதி உணர்வுகளும், இன்று நினைத்தாலும் மனதைச் சில்லிட வைக்கும்.

அத்தகைய புரிந்துணர்வுடன் நேசித்துப் பழகிய நண்பர் மனோ கணேசனுடன் பத்திக் கருத்துக்காக முரண்பட வேண்டிய நியாயம் ஏதும் என் பக்கத்தில் இல்லை.

இனி, அவர் மறுப்பை அப்படியே தருகிறேன் – வாசகர்கள் பார்வைக்கு. இவை அவை கூறியவை:–

இன்று வெள்ளிக்கிழமை (22/10/21), தனது காலைக்கதிர் மின் – ஏட்டில், நண்பர் வித்தியாதரன், 'இனி இது ரகசியம் அல்ல' என்ற வழமையான அங்கத்தில் கொஞ்சம் நீட்டி, நீளமாக ஒரு சம்பவத்தை எழுதியுள்ளார். அதை என் கவனத்துக்கு நியுசிலாந்து நண்பர் வரதா கொண்டு வந்துள்ளார். (செய்தி யாழ்ப்பாணத்திலிருந்து, நியுசிலாந்து ஓக்லண்ட் சென்று கொழும்புக்கு வந்துள்ளது.!)

எனது கட்சி/கூட்டணியில் இன்று இல்லாத, திரு. பிரபா கணேசனை சந்தித்து நான் அரசியல் பேசியுள்ளேன் என்பதே செய்திச் சுருக்கம்.

1970களிலிருந்துகொழும்பில்வாழும், யாழ் நல்லூரை சேர்ந்த எமது குடும்ப நண்பர் ஸ்ரீகாந்தாவின் தனிப்பட்ட விவகாரம் ஒன்றின் தொடர்பாக, பிரபாவை நீண்ட காலத்தின் பின், நண்பர் ஸ்ரீகாந்தின் அழைப்பின் பேரில் சந்தித்தேன். பின்னர் எமது சகோதரி கௌரியின் வீட்டில் நடைபெற்ற பிறந்த நாள் வைபவம் ஒன்றிற்கு போன போது அங்கு பிரபாவும் வந்திருந்தார்.

கருத்து வேறுபாடுகளை மறந்து இணைந்து செயற்பட இருவரும் இணங்கி இருக்கின்றார்கள் என்ற காலைக்கதிர் செய்தி, ஒரு அரசியல் செய்தி. இதில் உண்மையில்லை. இந்த செய்தி தவறு. அரசியல் தொடர்பில் ஒரு வார்த்தைகூட பேசப்படவில்லை. சிந்திக்கவும் இல்லை.

எங்கள் நண்பர் ஸ்ரீகாந்தாவின் விவகாரம் தொடர்பாக இருவரும் பேசினோம். எங்களது நேரடி ஆலோசனைகளை, நண்பர் ஸ்ரீகாந்தா பெற்றுக்கொண்டார். அதுவே அந்த சந்திப்பின் நோக்கம். தனிப்பட்ட அவ்விவகாரம் பற்றி பகிரங்கமாக இங்கே சொல்ல வேண்டிய அவசியமில்லை.

எனது பாதை கரடுமுரடானது. ஆனால், நேரானது. 2005 முதல் 2020 வரை என் மீது மேற்கொள்ளத் திட்டமிடப்பட்ட படுகொலை முயற்சிகள் உட்பட, உள்ளே இருந்தும், வெளியே இருந்தும் ஏற்பட்ட எல்லா சவால்களையும் வெற்றிக்கரமாக எதிர்கொண்டு, இன்று தென்னிலங்கையில், தேசிய மட்டத்தில், தமிழ் மக்கள் வாழும் இடங்களிலெல்லாம் வீச்சுப்பெற்று, வளர்ச்சியடைந்த ஒரு கூட்டணியின், தலைமைப் பொறுப்பில் நான் இருக்கிறேன்.

ஆகவே சும்மா, எடுத்தேன், கவிழ்த்தேன், என்று நான் முடிவுகளை எடுப்பதில்லை.

தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு உள்ளே இருக்கும் தமிழரசு கட்சியுடனும், அதற்குள்ளே முடிவுகளை எடுப்பவர்களுடனும் நெருக்கமான உறவு கொண்டவரும், என்னுடனும் தனிப்பட்ட நெருக்கமுள்ளவருமான நண்பர் வித்தியாதரன் காலைக்கதிரின் பிரதம ஆசிரியர் என எண்ணுகிறேன்.

சந்திப்பதும், பேசுவதும், சிரிப்பதும், மரியாதை நிமித்தம் கைலாகு கொடுப்பதும் எல்லாமே சமூக – அரசியல் வாழ்க்கைதான். நண்பர் வித்திக்குத் தெரியாததா?

தமிழீழ விடுதலை புலிகளால் கூட்டமைக்கப்பட்ட அமைப்புதான் தமிழ் தேசிய கூட்டமைப்பு. அதில் விடுதலை புலிகளால் துரோகிகள் என்று குறி வைக்கப்பட்டு தேடியழிக்கப்பட்ட கட்சியினரும் உள்ளார்கள். 2009 ஆம் வருட இறுதிப் போர் வரை மஹிந்த அரசுடன் இருந்தவர்களும், இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருக்கின்றார்கள். ஆயுதப் போர் என்பது அழிவுப்போர் என்று சொல்பவர்களும் உள்ளார்கள்.

இவையெல்லாம் ஒன்று சேர்ந்தது காலத்தின் கட்டாயங்கள். எது சரி, எது பிழை என இன்று நாம் தீர்ப்புச் சொல்ல முடியாது. வரலாறுதான் தீர்ப்பு வழங்கும்.

அதுபோல், ஜனநாயக மக்கள் முன்னணிக்குள், தமிழ் முற்போக்கு கூட்டணிக்குள் புதுவரவு, புதுபித்தல் வரவு மாற்றங்கள் வருமாயின், காலத்தின் கட்டாயங்கள் ஏற்படுமாயின், நான் பகிரங்கமாகச் சொல்வேன். என்னிடம் எந்த வித ஒளிவு மறைவும் கிடையாது. நண்பர் வித்திக்குதான் முதலில் சொல்வேன். ஹஹா..!

ஆனால், இந்த செய்தியில் சொல்லப்பட்டதன்படி, எமது கட்சி/கூட்டணியில் எதுவும் நடக்கவில்லை. அரசியல் சந்திப்பு எதுவும் நிகழவில்லை.

தனது மூல செய்திக்கு தந்த அதே முக்கியத்துவத்துடன் இந்த விளக்க செய்தியையும் நண்பர் வித்தி, காலையும், மாலையும் பிரசுரிப்பார் என நம்புகிறேன்.

– இதுதான் அவரின் மறுப்பு. இம் மறுப்புக் குறித்து எனது ஓரிரு கருத்துக்கள்.

01.மனோ கணேசன் மிகத் தேர்ந்த வாசகர். சமகால அரசியல் விடயங்களை நேரத்துடனேயே தேடி வாசித்து வைத்து நுனி விரலில் வைத்திருப்பவர். எனினும் என் பத்திச் செய்தி நியூஸிலாந்தில் இருந்து தெரியப்படுத்தப்பட்டுத்தான் தாம் அறிந்தார் என்பதை விசேடமாகக் கோடி காட்டியிருக்கிறார் மனோ எம்.பி. நல்லது. என் பத்தியும் தகவலும் தன்னுடைய கவனத்தில் எவ்வளவு தொலைவில் உள்ளன என்பதைக் குறிப்பால் சுட்டுவதன் மூலம், அவர் கூற வரும் செய்தி எனக்குப் புரிகின்றது.

02. எதிர் எதிர் துருவங்கள் எல்லாம் ஓரணியில் இருப்பதைச் சுட்டிக்காட்டுவதன் மூலம் அவர் என்ன கூற வருகின்றார் என்பதை வாசர்கள் புரிந்துகொள்ளவர் என்று நினைக்கின்றேன். இந்த மறுப்பில் அச்சில் வராத – வரிகளுக்கு இடையில் பொதிந்து கிடக்கின்ற – அர்த்தத்தை அவர்கள் நன்கு அறிவர். நான் விளக்கத் தேவையில்லை. ஏனெனில் அவர்களும் மனோ எம்.பி. போல தேர்ந்த புரிதல் உள்ளவர்கள்தான்.

03.வரலாறுதான் தீர்ப்பு வழங்கும் என்ற அவர் கூற்று சரியானதே. நான் நேற்று எழுதியதுதான் நாளை வரலாறாகி, அதுவே தீர்ப்பு என்று மனோ கணேசனே நியாயப்படுத்தவும் இடமிருப்பது அவரது மறுப்பில் உள்ளது. வாசகர்கள் கவனிப்பார்களாக!

★ ★ ★

அமுல்பேபி அண்ட் கோ'வின் அடாவடித்தனத்தால் யாழ்.மாவட்டத்தில் வீட்டுத் திட்ட உதவி பெறத் தகுதியுடையோர் அனுபவிக்கும் அவலம் தெரிந்ததுதான். பல தடவைகள் இப்பத்தியில் எழுதிக் களைத்து விட்டோம்.

'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்ற உயரிய தத்துவம்,

☞ 10






காலைக்கதிர் Kalaikkathir

# மட்டக்களப்பில் தமிழ் மக்கள் வாழவேகூடாது என்பதே இந்த திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம்




## துரைரெட்ணம் காட்டம்

மட்டக்களப்பு பொலன்னறுவை எல்லைக் கிராமமான புனானை காரமுனை பகுதியில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை செய்வது என்பது மட்டக்களப்பில் தமிழ் மக்கள் வாழக்கூடாது என்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் செயற்படும் பௌத்த ஆதிக்கத்தின் வெளிப்பாடாகும். எனவே, இந்த சிங்களக் குடியேற்ற நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கிறேன் என கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் ஈ.பி,ஆர்.எல்.எவ் பத்மநாடாளுமன்ற தலைவருமான இரா. துரைரெட்ணம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வாவிக்கரையிலுள்ள ஈ.பி,ஆர்.எல்.எப் பத்மநாபா மன்ற காரியலத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்– வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மாங்கேணி கிழக்கு பகுதியின் மட்டக்களப்பு பொலன்னறுவை எல்லைக் கிராமமான புனானை காரமுனை பகுதியில் 200 சிங்கள குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்துக்கு 6 ஏக்கர் வீதம் சிங்கள மக்களுக்கு வழங்கி திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தைச் செய்வதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்கின்றது.

இந்த சிங்களக் குடியேற்றத்தை செய்வதற்காக இலங்கையின் பௌத்த ஆலோசனைக்குழுவின் நடவடிக்கையின் பயனாக ஜனாதிபதியின் துணையுடன் கொழும்பு காணி ஆணையாளரது வழிகாட்டலின் பெயரில் இந்த பகுதியில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை நடத்துவதற்காக பௌத்த தலைமையிலான குழுவினருடன் பார்வையிட்டமை என்பது மட்டக்களப்பில் தமிழ் மக்கள் வாழக் கூடாது என்பதை மத்திய அரசின் செயற்பாடு முன்நிறுத்துகின்றது.

இது தொடர்பாக அந்தபகுதியில் மக்கள் பிரதிநிதிகளும் அந்தப்பகுதி மக்களும் ஒரு வெகுஜன ரீதியான எதிர்ப்பு போராட்டம் செய்து எதிர்ப்பை தெரிவித்த நிலையில் இந்த காணிகளை பாக்கச் சென்றவர்களுக்கு இதில் எதிர்ப்பு இருக்கின்றது என தெரியப்படுத்தியுள்ளது.

1983ஆம்ஆண்டு1985ஆம்ஆண்டு கல வரங்களின் ஊடாக அந்த பகுதியில் குறிப்பிட்ட சில 4 அல்லது 5 சிங்கள குடும்பங்களும் தமிழ் குடும்பங்களும் முஸ்லீம் குடும்பங்களும் இடம் பெயர்ந்தது என்பது வரலாறு இதற்கு 1982 ஆம் ஆண்டு வருடாந்த அனு மதிப்பத்திரம் இந்த பகுதியில் ஒரு குடும் பத்துக்கு 6 ஏக்கர் வீதம் 198 குடும்பங் களுக்கு இருந்ததாக பொய்யான வருடாந்த அனுமதிப்பத்திரத்தைத் தயாரித்து சம்பந்தப்பட்டோருக்கு வழங்கியிருக்கின்றார்கள். இந்த வருடாந்த அனுமதிப் பத்திரத்தில் கைமெுத்து வைத்த உத்தியோகத்தர் என்பவர் எங்கள் அறிவுக்கு எட்டியவரை அப்படி ஓர் உத்தியோகத்தர் வேலை செய்யவில்லை. ஆகவே, காணி ஆணையாளர் இந்த வருடாந்த அனுமதிப்பத்திரம் பொய்யா உண்மையா என இந்த விடயத்தை முதலில் விசாரணை செய்யவேண்டும்.

வருடாந்த அனுமதிப்பத்திரம் அந்த வருடத்தில் பூர்த்தி செய்யப்படாவிட்டால் அது இரத்து செய்யப்படும். ஆகவே, ஒரு பொய்யான ஆவணத்தைத் தயாரித்ததாக ஒரு குற்றச்சாட்டடை நான் முன்வைக்கின்றேன் அது மட்டுமல்ல கடந்த பதினைந்து இருபது வருடமாக கிழக்கு மாகாண சபையில் இந்த விடயத்தை 4 ஆவது தடவையாக நான் இங்கு பேசுகின்றேன். இந்த குடியேற்றம் தொடர்பாக கடந்த வருடம் அதற்கு முந்தியவருடம் பல முயற்சிகள் செய்யப்பட்டு கிழக்கு மாகாண காணி ஆணையாளர், கிழக்கு மாகாணசபை மக்கள் பிரதிநிதிகள் வாகரை பிரதேசத்திற்குட்பட்ட அதிகாரிகள், பொதுமக்கள் பல ஆட்சேபனையை தெரிவித்து வந்தோம்.

ஆனால் மீண்டும் மீண்டும் மத்திய அரசாங்கமும் பௌத்த ஆலோசனைக் குழு சிங்கள மக்களை நாங்கள் குடியேற்றி ஆகவேண்டும் என இன்று இதனை கையில் எடுத்திருக்கின்றது என்பது இலங்கை அரசாங்கத்தின் ஒரு கேவலம் கெட்ட ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் தலைமையில் செயற்படும் பௌத்த ஆதிக்கத்தின் வெளிப்பாடாகும்.

எனவே இந்தத் திட்டமிட்ட குடியேற்றத்தை வன்மையாகக் கண்டித்து இன்று இந்த நிலைமையில் அந்த இடத்திற்கு சென்று மக்கள் பிரதிநிதிகள் ஆர்ப்பாட்டம் நடாத்துவது என்பது வரவேற்கத்தக்க விடயம் இதை உணர்ந்து மத்திய அரசு இதனை நிறுத்துவதற்கான செயற்பாடுகளை செய்யவேண்டும். – என அவர் தெரிவித்தார்.

# மட்டு. காரமுனையில் சிங்கள மக்களை குடியேற்ற முயற்சி; மக்கள் கடும் எதிர்ப்பு!



மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேச செயலாளர் பிரிவின் மாங்கேணி கிராம சேவையாளர் பிரிவில் காரமுனை பகுதியில் சிங்கள மக்களை குடியேற்ற முன்னெடுக்கும் செயற்பாட்டுக்கு எதிராக அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

வாகரை பிரதேச செயலாளர் பிரிவின் மாங்கேணி கிராம சேவையாளர் பிரிவில் காரமுனை பகுதியில் 1982 ஆம் ஆண்டுக்கு முன்பாக சிங்கள மக்கள் குடியிருந்தனர் என்று கூறி அவர்களுக்கான நடமாடும் சேவையொன்று புனானையில் உள்ள வன திணைக்களத்தில் நடைபெற்றது.

இந்த நடமாடும் சேவையை மத்திய காணி ஆணையாளர், காணி ஆணையாளர் ஜி.கீர்த்தி கமகே மற்றும் கிழக்கு மாகாண உதவி காணி ஆணையாளர் ஜி.ரவிராஜன் ஆகியோர் இணைந்து நடத்தியிருந்தனர்.

இந்த நடமாடும் சேவையில் மட்டக்களப்பு மாவட்ட செயலக காணி திணைக்கள மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் காணி உதவிப் பணிப்பாளர் உட்படப் பலர் இணைந்திருந்தனர்.

இதன்போது குறித்த பகுதியில் 1982 ஆம் ஆண்டுக்கு முன்பாக வசித்தனர் எனத் தெரிவிக்கப்படும் சிங்கள மக்களின் ஆவணங்கள் பரிசோதிக்கப்பட்டு அவர்களுக்கான காணிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.



இந்த நிலையில் அப்பகுதிக்குச் சென்ற மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தலைமையிலான குழுவினர், மேற்படி செயற்பாடுகள் தொடர்பில் தமது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இதன்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், பா.அரியநேத்திரன், ஞா.சிறிநேசன், மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், ஏறாவூர்ப்பற்று பிரதேசசபை தவிசாளர் எஸ்.சர்வானந்தன், பிரதேசசபை, மாநகரசபை உறுப்பினர்கள்,பொதுமக்கள் எனப் பலர் நடமாடும் சேவை நடைபெறும் பகுதிக்கு சென்று தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இதன்போது அப்பகுதிக்கு பெருமளவான பொலிஸார் வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததுடன் காணி நடமாடும்சேவைக்கும் சிங்கள குடியேற்றத்துக்கும் கடும் எதிர்ப்புத் தெரி விக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் எதுவித குடியேற்றமும் செய்யப்படமாட்டாது எனவும் காணி ஆவணங்களை மட்டும் பரிசோதனைகள் செய்யப்பட்டு பின்னர் அவர்களுக்கு வேறு இடங்களில் காணி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என காணி ஆணையாளர் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனிடம் உறுதியளித்தார். அதனையடுத்து காராமுனைக்கு சிங்கள மக்களும் காணி ஆணையாளரும் சென்று அங்கு காணிகளைப் பார்வையிட்ட நிலையில் அதற்கு எதிராக அப்பகுதி மக்களும் நாடாளுமன்ற உறுப்பினரும் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தமையுடன் காணி ஆணையாளரை அப்பகுதியை விட்டு வெளியேறுமாறு கோரி ஆர்ப்பாட்டமும் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து காணி ஆணையாளர் மற்றும் உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் அங்கிருந்து திரும்பிச் சென்றனர்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவருமான சந்திரகாந்தன் மற்றும் இராஜாங்க அமைச்சர் வியாழேந்தேரன் போன்றவர்கள் இவ்வாறான சம்பவங்கள் நடக்கும்போது இவர்கள் கொழும்பிலும் வெளிநாடுகளுக்கும் சென்று ஒளிந்துகொள்கின்றனர் எனவும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.

Personal English Classes
K Ganesh (BA.Pera)
இந்த தனி வகுப்புகளில் படிக்கும் போது பேச்சு பயிற்சிகளும் இடம்பெறும்.
Grade 7-
GCE OL AL
பட்டதாரிகள் ,
தொழில்புரிவோர்
Spoken Grammar
கற்கமுடியும்.
077 766 8725
நீராவியடி, யாழ்ப்பாணம்

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சூறையாடப்படும் சுதந்திரம்

தற்போது வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள – குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள – சட்டத் திருத்தம் நாட்டு மக்களுக்கு அச்சுறுத்தலாக அமையும் என்பதுடன் ஜனநாயகத்தின் குரல் வளையை நசுக்குவதாகவும் அமையும்.

– இப்படி ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் அதன் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் சுட்டிக்காட்டியிருக்கின்றார். மிக உண்மையான வார்த்தைகள் இவை.

இத்தகைய சட்ட மூலம் பற்றிய விடயம் பெருமளவில் ஊடகங்களில் வெளிவரா விட்டாலும் மனித உரிமைகள் அமைப்புகளும், ஆர்வலர்கள் தரப்புகளும் இவ்விடயம் குறித்து மிகுந்த சிரத்தை எடுத்து கடும் எதிர்ப்பு வெளிப்படுத்தத் தொடங்கியிருக்கின்றன.

அதனால் இவ்விவகாரத்தில் முன்வைத்த காலை சற்று பின் வைத்துத் தடுமாறுகின்றது கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிப்பீடம்.

இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கான அரசின் உத்தேசம் கடந்த 8ஆம் திகதி, அது பற்றிய வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்த போது அம்பலமானது. அதுவரை இவ்விடயத்தில் அம்சடக்காக இருந்து விட்டு – அது பற்றி சத்தம் சந்தடியே காட்டாமல் அமானுஷ்ய அமைதி பேணி விட்டு – இம்மாத முற்பகுதியில் மெல்ல வர்த்தமானி அச்சிடலுக்கு அதன் பிரதியை அனுப்பியது ஆட்சிப் பீடம்.

வர்த்தமானியில் சட்டமூல வடிவம் வெளியானதுமே எதிர்க்கட்சிகள், மனித உரிமைகள் அமைப்புகள், சர்வதேச அவதானிகள் தரப்புகள் எல்லாம் உஷாராகின. கடும் எதிர்ப்பு வெளியாகத் தொடங்கியதும் அரசு மெல்ல அடக்கிக் கொண்டது.

அந்தச் சட்டமூலத்துக்கு ஆதரவாக அரசுத் தரப்பிலிருந்து பெரும் பிரசாரமோ அல்லது நியாயப்படுத்தல் எதுவுமோ வெளியாகவில்லை.

மாறாக, வர்த்தமானியில் வெளியான சட்ட மூலத்தை நாடாளுமன்றுக்குச் சமர்ப்பிக்காமல் இழுத்தடிக்கின்றது அரசு. இந்த மாத முற்பகுதியில் வர்த்தமானியில் வெளியான சட்டமூலத்தை நேற்று வரை நாடாளுமன்றுக்கு அரசு சமர்ப்பிக்கவில்லை. அதனால் நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலைத் தீர்மானிக்கும் நாடாளுமன்றக் குழுவுக்கும் அது இதுவரை வரவில்லை.

இனி அடுத்த மாதத்தில் அது வருமா? அல்லது வர்த்தமானி அறிவித்தலோடு அது கைவிட்டு விடப்படுமா? – என்பவை எல்லாம் இனிப் பொறுத்திருந்துதான் அவதானிக்கப்பட வேண்டும்.

குற்றவியல் நடவழக்கைச் சட்டக்கோவையின் படி கைது செய்யப்படும் எவரும் 24 மணிநேரத்துக்குள் நீதிவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்படவேண்டும். சில விசேட குற்றங்களின் பெயரில் மட்டும் – சிறப்பு ஏற்பாடுகளின் கீழ் – இந்தக் கால அவகாசம் 48 மணி நேரமாக நீடிக்கப்படலாம்.

இதனை மாற்றி, கைது செய்யப்படுவோரை நேரில் முன்னிலைப்படுத்தாமல், இணைய செயலி மூலம் நீதிவானுக்குக் காட்டும் முறைமையை இந்தப் புதிய திருத்தம் ஏற்படுத்துகின்றது.

கைது செய்யப்படுவோரை நீதிமன்றில் முன்னிலைப் படுத்தாமல், தடுத்து வைத்து விசாரிப்பதற்கான அதிகாரத்தை தடுப்புக் காவல் உத்தரவுப் பத்திரம் மூலம் பிரயோகிப்பதற்குப் பயங்கரவாதத் தடைச் சட்டம் அனுமதிக்கின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தையே அடியோடு ஒழியுங்கள் என்ற அழுத்தம் வரும்போது, ஒருபுறம் அதை ஒழிக்க அல்லது திருத்த அல்லது மாற்ற ஏற்பாடுகள் நடப்பதாகக் காட்டிக் கொண்டு, மறுபுறத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் உள்ள மிகக் கெடுதியான ஏற்பாடுகளை சாதாரண குற்றவியல் நடவழக்கைச் சட்டக்கோவைக்குள்ளும் நுழைத்து விட – செருகி விட – கொழும்பு எத்தனிக்கின்றது என்பது கண்கூடு.

ஆரம்பத்திலேயே இவ்விடயத்தில் மக்களும், எதிர்க் கட்சியும், மனித உரிமைத் தரப்புகளும் உஷாராக இருக்கா விட்டால், இருக்கும் கொஞ்ச நஞ்ச சுதந்திரமும் கூட கோட்டாபய ஆட்சிப் பீடத்தினால் அள்ளுப்பட்டு விடும். அதனால் கவனமாக – எச்சரிக்கையாக – இருப்போம்.

## காணி சீர்திருத்த அதிகார சபை புதிய கட்டடம் பதுளையில் திறப்பு; உறுதி பத்திரமும் வழங்கல்

(தீகவாபி நிருபர்)

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பதுளை மாவட்டத்துக்கான காணி சீர்திருத்த அதிகார சபையின் புதிய கட்டடம் திறக்கும் நிகழ்வுகாணிசீர்திருத்தம்ஆணைக்குழுவின் தலைவர் வழக்கறிஞர் நிலாந்த விஜேசிங்க தலைமையில் கடந்த புதன்கிழமை காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேனவால் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. அத்துடன் ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு தேசிய கொள்கையின் அடிப்படையில் 150 காணி உறுதிப்பத்திரங்கள் மூவின மக்களுக்கும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் தொழிலாளர் அமைச்சரும் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நிமல் சிறிபால டி சில்வா, பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான டிலான்



பெரேரா, கிராமிய பாடசாலை வீதி உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் தேனுக விதான கமகே மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான அரவிந்தகுமார், சுதர்சன தெனிபிடிய மற்றும் பதுளை மாவட்ட காணி சீர்திருத்த அதிகார சபையின் பணிப்பாளர் நிமல் குமார ஹதரசிங்க ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

## தேசிய அடையாள அட்டை சேவை திங்கள் முதல் மீண்டும் ஆரம்பம்

கொவிட் பரவல் நிலைமை காரணமாகத் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த அடையாள அட்டை விநியோகிப்பதற்கான ஒரு நாள் சேவை எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவருமாறு–

கொவிட் பரவல் நிலைமை காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த தேசிய அடையாள அட்டையை விநியோகிப்பதற்கான ஒரு நாள் சேவை மற்றும் நேரம் ஒதுக்கப்பட்டிருந்த சேவை பெறுனர்களுக்காக எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஒரே சந்தர்ப்பத்தில் ஆட்பதிவு திணைக்களத் தின் முன்பாக பெருமளவான மக்கள் சேவையைப் பெறுவதற்காக ஒன்று கூடுவது அபாயம் மிக்கது என்பதால், மட்டுப்படுத்தப் பட்டளவில் சேவை பெறுனர்களை பத்தரமுல்லை பிரதான அலுவலகத்துக்கும் , காலி தென் மாகாண அலுவலகத்தில் இந்த ஒரு நாள் சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

எனவே ஒரு நாள் சேவையைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்த்துள்ள சேவை பெறுநர்கள் கிராம உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தை குறித்த பிரதேசத்தில் உள்ள பிரதேச செயலக அடையாள அட்டை பிரிவில் சமர்ப்பிக்க வேண்டும். இதன் போது தமக்கு வருகை தருவதற்கு உகந்த நாளையும் நேரத்தையும் ஒதுக்கிக் கொள்ள வேண்டும்.

அதற்கமைய குறிப்பிட்ட தினத்தில் குறிப்பிட்ட நேரத்தில் திணைக்களத்துக்கு வருகை தர வேண்டும். அவ்வாறின்றி குறித்த தினத்தில் வருகை தர முடியாவிட்டால் மீண்டும் பிரதேச செயலகத்துக்குச் சென்று மீண்டுமொரு நாளொன்றையும் நேரத்தையும் ஒதுக்கிக் கொள்ள வேண்டும்.

தற்போது சாதாரண சேவையின் கீழ் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்கான இலக்கத்தை பெற்றுக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் பிரதான அலுவலகத்திற்கு வருகை தந்து சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய மீனவரின் அத்துமீறல் பாதிப்பை விட குருநகர் மீனவராலே அதிகம் துன்புறுகிறோம்

### பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசத் தலைவர் வருத்தம்

ந.லோகதயாளன்.

யாழ்ப்பாணம், ஒக். 23

இந்திய மீனவர்களின் அத்துமீறலால் ஏனைய மீனவர்கள் பாதிக்கப்படுவதை விடவும் குருநகர் பகுதி ட்ரோலரால் நாம் சந்திக்கும் இழப்பு அதிகம் என பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் ஜோசப் பிரான்ஸிஸ் தெரிவித்துள்ளார்.

90 ஆம் , 93 ஆம் ஆண்டுகளில் 50 இற்கும் உட்பட்ட ட்ரோலர் படகுகளே குருநகரில் நின்றன. அப்போதும் இதனை முழுமையாகத் தடை செய்யக்கோரி மாற்றுத் தொழிலுக்காக முல்லைத்தீவில் இருந்து விடுதலைப் புலிகளால் கடன் அடிப்படையில் மாற்றுத் தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இருப்பினும் ஒருவரேனும் ஒரு சதமும் அப்போது விடுதலைப் புலிகளுக்கு செலுத்தவில்லை.

அவ்வாறான சூழலில் இந்த 400 படகும் இப்ப குட்டி போட்டவைதான். இந்த 400 படகும் எப்படி வந்தவை என்பதை அவர்களின் அபிவிருத்திச் சங்கத்தின் பதிவை பிரீட்சித்தாலே உண்மை தெரியும்.

இதற்கும் அப்பால் இந்த குருநகர் மீனவர்களின் படகுகள் எமது பகுதிக்குள் வந்து தமிழனை தமிழனே அழித்தமையால் பல நூறு கோடி ரூபா நட்டம் எமக்கு ஏற்பட்டது. எமக்கு இந்திய மீனவர்கள் அல்லர் . எமக்கு அத்தனை நட்டம் ஏற்படுத்தியமை இந்த குருநகர் மீனவர்களின் ட்ரோலர் படகுகள் தான் அவ்வளவு சேதங்களையும் ஏற்படுத்தினர். அதுவே இன்றுவரை தொடர்கின்றது.

இவ்வாறு பல தடவை சேதம் ஏற்படுத்தும் போது எம்மால் சில படகுகள் கைப்பற்றி வைத்திருந்த சமயங்களில் இதே அபிவிருத்தி சங்கம் வந்து நட்டம் செலுத்துவதாக பிணை எடுத்துச் சென்றும் ஒரு சதமேனும் நட்டம் செலுத்தவில்லை. அந்த நட்டப் பணத்தை செலுத்தினால் எமது மாவட்ட மீனவர்கள் ஒரு வருடம் படுத்திருந்து உணவு உண்ணும் அளவு நிலுவை உள்ளது.

எம்மைப் பொறுத்தவரையில் குருநகர் மீனவர்களையும் எம்மையும் நாசமாக்கியதில் பெரும்பங்கு இந்த நாரா நிறுவனத்தைச் சேரும். ஏனெனில் இவர்கள் முன்னுக்கு பின் முரணான அறிக்கையை விட்டு ட்ரோலருக்கு அனுமதிக்கும்படியாக தற்போது அறிக்கையை விட்டுள்ளனர்.

இவற்றை எல்லாம் மறைத்து எமது சிறு கடலில் உள்ள வளத்தை அழிக்கும் உண்மை தெரியாத ஆலோசகரின் கருத்தை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம் . அத்தோடு அனுமதி இல்லாத இந்த தொழில் முறைமைக்கு எவ்வாறு திணைக்களத்தினர் அனுமதி வழங்குகின்றனர் என்பதிலும் எமக்கு சந்தேகம் உள்ளது. – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையில் இதுவரை டெல்டா பிளஸ் இல்லை!

## சந்திம ஜீவந்தர தெரிவிப்பு



கொரோனா வைரஸின் டெல்டா மாறுபாட்டின் புதிய வகையான டெல்டா பிளஸ் இலங்கையில் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை நோயெதிர்ப்பு சக்தி பிரிவின் தலைவர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

தமது ஆய்வுகூடத்தில் துரித ஆய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இதற்கமைய டெல்டா பிளஸ் மாறுபாடு இதுவரை நாட்டில் அடையாளம் காணப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் பெற்றுக்கொள்ளப்படும் மாதிரிகள் ஊடாக தொடர்ந்தும் பரிசோதனைகள் இடம்பெறுகின்றன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நாட்டில் எரிபொருள் பற்றாக்குறை? எரிசக்தி அமைச்சர் விளக்குகிறார்!

நாட்டினுள் எவ்வித எரிபொருள் பற்றாக்குறையும் இல்லை என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ஏற்பட்ட குழப்ப நிலை தொடர்பாக விளக்கம் அளிக்கும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்துள்ள அமைச்சர் –

ஒரே விடயத்தை 108 தடவை சொன்னால் அது உண்மையாகிவிடும் என்று பழைய நம்பிக்கை ஒன்று உள்ளது. அதனால் என்னவோ கடந்த 4 மாதங்களால் இடைக்கிடையில் பெற்றோலிய தொழிற்சங்கங்கள் அதேபோல் எதிர்க்கட்சியின் அரசியல்வாதிகள் நாட்டில் எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.

கடந்த 4 மாதங்களாக அவர்கள் கூறிய எரிபொருள் பற்றாக்குறை ஏற்படவில்லை. நாட்டில் எரிபொருள் பற்றாக்குறை ஏற்படுவதற்கு முன்னரே நான் அறிவிப்பேன் என்று நான் உறுதியளித்தேன்.

அதன்படி, செப்ரெம்பர் மாதம் 29ஆம் திகதி நாட்டில் கச்சா எண்ணெய் பற்றாக்குறையொன்று ஏற்பட வாய்ப்புள்ளது என நான் தெரிவித்தேன். அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக நான் கூறியிருந்தேன்.

மீண்டும் அதேதான் கூறுகிறேன். நாட்டில் தற்போது எவ்வித எரிபொருள் பற்றாக்குறையும் இல்லை. வீணாகக் குழப்பமடைய வேண்டாம். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நீர்வேலியில் உள்ள வீடொன்றில் வாள்வெட்டுக் குழு தாக்குதல்!

நீர்வேலியில் உள்ள வீடொன்றுக்குள் சென்ற வாள் வெட்டுக் குழு தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

யாழ்ப்பாணம் நீர்வேலி தெற்கு ஜே 268 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள வீடொன்றினுள் கடந்த வியாழக்கிழமை இரவு புகுந்த வாள் வெட்டுக் குழு, வீட்டில் இருந்த பொருள்களை அடித்து உடைத்துவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில், வாள்கள், கம்பிகள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்களுடன் வந்த 4 பேர் கொண்ட கும்பலே இவ்வாறு தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிது.

முப்படைகள், பொலிஸாரை சந்தித்து யாழில் இயங்கும் வாள் வெட்டுக்குழுக்களை அடக்குவேன் என வடமாகாண ஆளுநர் கலந்துரையாடிய சில மணி நேரங்களில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒரு கோடியே 28 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் முழுமையாக தடுப்பூசி பெற்றனர்

கொரோனாதடுப்பூசிவழங்கும் திட்டத்தின் கீழ் நாட்டில் இதுவரை ஒரு கோடியே 47 லட்சத்து 89 ஆயிரத்து 68 பேருக்குக் கொரோனாத் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதேபோல, ஒரு கோடியே 28 லட்சத்து 50 ஆயிரத்து 329 பேருக்கு கொரோனா தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளதாக அந்தப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

குறிப்பாக கடந்த வியாழக்கிழமை கொவிட் சீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் 5 ஆயிரத்து 834 பேருக்கு செலுத்தப்பட்டுள்ளது.

அதேபோல சினோபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் 3 ஆயிரத்து 969 பேருக்கும் சினோபோர்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் 59 ஆயிரத்து 428 பேருக்கும் செலுத்தப்பட்டுள்ளது.

பைஸர் தடுப்பூசியின் முதலாவது டோஸ் 75 ஆயிரத்து 763 பேருக்கும் பைஸர் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் 786 பேருக்கும் செலுத்தப்பட்டுள்ளது.

மொடர்னா தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் 6 ஆயிரத்து 180 பேருக்கு செலுத்தப்பட்டுள்ளது.

# விவசாயிகளுக்கு அதிக இலாபத்தை பெற்றுக்கொடுப்பதே அரசின் நோக்கம்!

## ஜனாதிபதி இப்படிக் கருத்து

விவசாயிகள் முகங்கொடுக்கும் அசௌகரியங்களுக்கு தீர்வுகளைப்பெற்றுக்கொடுப்பதே அரசாங்கத்தின் நோக்கமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கமநலச்சேவைகள் உத்தியோகத்தர்களுடன் தொலைக்காணொலி ஊடாக கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.


சுற்றாடலையும் பொதுமக்களின் சுகாதாரத்தையும் பாதுகாப்பதுடன், அதிக இலாபத்தை விவசாயிகளுக்குப் பெற்றுக்கொடுப்பதே அரசாங்கத்தின் முக்கிய எதிர்பார்ப்பாகும் என்றும் அதன் ஊடாகவே அரசாங்கம் எதிர்பார்க்கும் இலக்கை அடைய முடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஒருபோகம், இருபோகத்துக்கு மாத்திரமன்றி பல சந்ததியினரை பயன் பெறச்செய்வதே பசுமை விவசாயத்தின் இலக்காகும் என்றும் இது தொடர்பாக விவசாயிகளைச் சந்தித்து விடயங்களைத் தெளிவுபடுத்துவது மிகவும் முக்கியமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

விவசாயிகள் முகங்கொடுக்கும் பிரதான பிரச்சினையை அடையாளங்கண்டு, அது தொடர்பாக அரசாங்கத்தை அறிவுறுத்துவது அதிகாரிகளின் பொறுப்பாகும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அதன் ஊடாகவே பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான விசேட ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள முடியுமென்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

# அரச மருந்தகக் கூட்டுத்தாபன தலைவர் பிரசன்ன இராஜினாமா?



அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பிரசன்ன குணசேன தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

வைத்தியர் பிரசன்ன குணசேன ஜனாதிபதியிடம் இராஜினாமா கடிதத்தை ஒப்படைத்துள்ளார் எனவும் அவரது கடிதத்தை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டாரா இல்லையா என்பது இன்னும் தெரியவில்லை என்றும் தகவலறிந்த வட்டாரங்கள் ஆங்கில ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளன.

மேலும் உடல்நலக் குறைவு மற்றும் தனிப்பட்ட காரணங்களுக்காக அவர் பதவியை இராஜினாமாச் செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியர் பிரசன்ன குணசேன ஒரு புகழ்பெற்ற நரம்பியல் அறுவைச் சிகிச்சை நிபுணர் ஆவார். அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக கடந்த சில மாதங்களாக இலங்கைக்கு கொரோனாத் தடுப்பூசிகளை வாங்குவதற்கு ஒரு முன்னணி சேவையை வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழறிஞர் சைவப்புலவர் செல்லத்துரை அஞ்சலிப் பா

சைவமும் தமிழும் ஓங்கத்
தன்னையே தந்த மேதை
வையத்தில் நின்போ லுண்டோ
வான்புகழ் கொண்டீர் ஐயா!
தெய்வமே உவந்து நின்னைத்
தன்வசங் கொண்ட தாமோ!
பொய்யிலை நெஞ்சம் நொந்தோம்
பிரிந்தனை எம்மை ஏனோ!

பன்னூறு மாணவர்கள்
பயின்றிடக் காலாய் நின்றீர்
தன்வய நற்பண்பாலே
சீரிய ராகச் செய்தீர்
பொன்மனங் கொண்ட ஐயன்
புலமையின் குன்று யார்க்கும்
நன்மையே செய்தீர் ஓரார்
நரரிலை நீரோ சீலர்

தலைநகர் தமிழ்ச்சங்கத்தின்
சான்றோரில் ஒருவராகத்
தலைதாங்கி நடத்தி வைத்தீர்
தமிழ்கற்க வழியுஞ் செய்தீர்
பலரின்று தமிழைக் கற்றுப்
புலமையுங் கொள்ள நீரும்
பலமானீர் புலவர் ஐயா
பண்பினில் புதைந்த வேந்தே!

காலலென் செய்கு வானோ
கடவுளின் ஆணை கொண்டான்
ஞாலமே இருண்டாற் போன்று
நாமுளோம் அடங்காச் சோகம்
சீலத்தின் உருவே எங்கள்
செல்லத்துரையே தெய்வம்
மேலுல கேற்றிட் டாலும்
மனங்களில் நிறைந்து வாழ்வீர்!

ஜின்னாஹ் ரிபுத்தீன்

## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் பாதிப்பு;

# வாழ்வாதாரம் இழந்த குடும்பங்களுக்கு இழப்பீட்டு மனு நவம்பரில் விசாரணைக்கு!

எக்ஸ்பரஸ் பேர்ல் கப்பலில் ஏற்பட்ட தீப்பரவல் காரணமாக வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கு இழப்பீடு வழங்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, குறித்த மனுவை எதிர்வரும் நவம்பர் மாதம் 9 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எக்ஸ்பரஸ் பேர்ல் கப்பலில் ஏற்பட்ட தீப்பரவல் காரணமாக வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கு 7.77 பில்லியன் ரூபா இழப்பீடு வழங்குமாறு உத்தரவிடக் கோரி பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இந்த அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்திருந்தார்.

துறைமுக அதிகாரசபை மற்றும் அதன் தலைவர் உள்ளிட்ட 20 தரப்பினர் இந்த மனுவின் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

மேலும் கப்பலில் ஏற்பட்ட தீப்பரவல் காரணமாகச் சுற்றாடலுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பில் இதுவரையில் உரிய பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவில்லையெனக் குறித்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 169

**423.ரோம் சட்டத்தின் அந்த சரத்துக்கள் எதனைக் குறிப்பிடுகின்றன?**

அதாவது எந்த இன மக்களோ, பாதிக்கப்பட்டவர்களோ, அவர்களின் தரப்புகளோ அல்லது அரசியலற்ற சர்வதேச அமைப்புக்களோ பாரதூரமான –




மனித குலத்திற்கெதிரான – குற்றங்கள் நடந்தன, நடக்கின்றன என முறையிட்டால் பிரதான சட்டத்தரணி அதனைக் கணக்கில் எடுத்து, ஐ.நாவினது அங்கங்களிடமிருந்து அவை பற்றி மேலதிக தகவல்களைக் கோரி, அவற்றை ஆராய்ந்து, அந்தக் குற்றங்களின் தீவிரத்தின் அடிப்படையில் அவை நியாயமானவை என்றால்நீதிமன்றின்முன்சோதனை ஆணையத்துக்கு (Pro Trial Chamber) இதனை விசாரிக்குமாறு பரிந்துரை செய்யலாம். அந்தப் பரிந்துரைக்கு ஆதாரமான சாட்சியங்களையும் அவை நியாயமானவை என்பதையும் அந்த பரிந்துரை ஆதாரப்படுத்தப்பட வேண்டும். அந்த பரிந்துரையின் அடிப்படையில் அதன் பிற்பாடு முன்சோதனை ஆணையத்தின் நீதிபதிகளே அப்படியான விசாரணைக்கு உத்தரவிடலாம். அதுபோன்ற தீர்மானத்திற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய விசாரணைகள் நீதியானதுதான் என இருக்கும் ஆவணங்களை ஆதாரப்படுத்த வேண்டும். (சரத்து 15(4)

அந்தக் குற்றங்கள் இனப்படுகொலை, போர் அல்லது மனித குலத்திற்கு எதிரான குற்றங்களாக வேண்டும். அவை சர்வதேச குற்றவியல் மன்றத்தின் அங்கத்தினரான ஒரு நாட்டின் பிரஜையால் செய்யப்பட்டிருக்க வேண்டும் அல்லது அங்கத்துவம் கொண்ட நாட்டில் நடந்திருக்க வேண்டும்.

அவை 1 ஜுலை 2002 பின் நடந்தவையாக இருக்க வேண்டும்.

அத்தோடு முன்சோதனை ஆணைக்குழு, குற்றம் இழைத்த நாடு அவ்விடயம் தொடர்பில் ஏதாவது நடவடிக்கைகள் எடுத்ததா, எடுக்குமா, எடுக்கக் கட்டாயப் படுத்தப்படலாமா அல்லது அதைப்பற்றி எதுவுமே செய்யப்போவதில்லையா என்பவற்றையும் கணக்கில் கொள்ள வேண்டும். (சரத்து 17)

அதனோடு விசாரிக்க தேவையுள்ள குற்றங்கள் எவ்வளவு, எத்தனை பேரை அடக்கும், எந்த விதமான விசாரணைப் பாதைகளை அமைக்க வேண்டும் என்பவற்றையும் பார்க்கக் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.


**424.இவற்றைக் கூர்ந்து பார்த்தால் உடனடி நடவடிக்கைக்கு ஏதும் பயன் கிடைக்குமா?**

முதல் கூறியபடி தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட அட்டூழியங்களை இன்னொரு மன்றில் சர்வதேச விழிப்புணர்வுக்கு வைத்திருப்போம் என்பதுதான் நிதர்சனம். ஆனால் எத்தனை அரசியல் சார்பற்ற சர்வதேச நிறுவனங்கள் பல காலமாக மனித உரிமைகள் மன்றுக்கு மனுக்கள் சமர்ப்பித்து இருக்கின்றன. ஏகப்பட்ட தமிழ் அமைப்புக்களும் அவற்றைச் செய்துள்ளன. அவை ஆமை வேகத்தில் நடந்து இந்த வருடம் மேலும் சாட்சியங்களைச் சேகரிக்கவென்றும், சேர்த்தவற்றை ஆராயவென்றும் மனித உரிமை மன்று ஆயத்தங்கள் செய்துள்ளது. அது எடுத்துக் கொண்டுள்ள காலப்பகுதி 2002 இருந்து 2012 வரையானதாகும். இந்த விதமான ஒரு சமர்ப்பணத் தில் பிரதான சட்டத்தரணியும் 1 ஜுலை 2002க்கு பிற்பட்ட காலத்தைதான் ஆராயலாம்.

ஆகவே சர்வதேச குற்றவியல் மன்றின் பிரதான சட்டத்தரணி மேலதிக தகவல்களை ஐ.நாவிடமிருந்து கோரும் போது(இவை ஒவ்வொன்றுமே வேறான கட்டமைப்புக்கள் ஆகவே ஒன்றிலிருந்து அடுத்ததற்கு பொதுவானதல்ல) குற்றமன்று இவற்றை ஆராய்வது தெரிய வரும். அதனால் அதைப்பற்றிய இன்னுமொரு விசாரணை நீதியானதுதானா. தேவையானதுதானா அல்லது வீணான நேர, பண விரயங்களா என்ற கேள்விகள் தானாகவே எழும். மற்றது, குற்றம் சாட்டப்பட்ட அரசு அல்லது நாடு ஏதும் நடவடிக்கைகள் எடுத்ததா, எடுக்குமா என ஸ்ரீலங்காவிடம் கேட்கப்படும் பட்சத்தில் அவர்கள் இதனை எவ்வளவு இழுத்தடிப்பார்கள் எனப் புரிந்து கொள்ள வேண்டும். மனித உரிமை மன்றிலேயே 12 வருடங்களுக்கு மேலாகிவிட்டன. அவற்றையே பலம் படுத்தவேண்டியதும் தொடரும் அட்டூழியங்களை நெறிப் படுத்த வேண்டியதுமான கடமைகள் உண்டு. அதன் அடிப்படையில் காரியங்கள் ஆற்றுவதுதான் புத்தி சாதுரியம். மாற்றுச் சிந்தனைகள் வேண்டும். அவை சலசலப்பு தரும். சலசலப்புக்காக, தங்களது றோக்கங்களை சிதற விடுவது தேவையா எனவும் பரிசீலிக்க வேண்டும்.

**425.இவை போன்றவை வேறு மக்களாலோ நாடுகளாலோ முன்னெடுக்கப்பட்டனவா?**

றோகிங்கியா முஸ்லிம் இனத்தவர்களை பர்மா (மியன்மார்) அரசு கொடூரமான அட்டூழியங்களால் பங்களாதேஷத்துக்கு நாடு கடத்தியதால் சர்வதேச குற்றவியல் நீதி மன்றின் அங்கத்துவ நாடான பங்களாதேஷம் இந்தக் குற்றச்சாட்டை பதிந்தது. அவற்றின் தீவிரத்தாலும் பாதிக்கப்பட்ட மக்கள் பங்களாதேஷத்தில் இருக்கிறார்கள் என்பதால் முன்விசாரணை ஆணையம் அதனை ஏற்றுக்




கொண்டது. மியன்மார் அரசாங்கத்திற்கு எதிரான சர்வதேச நோக்கும் இதனை சாதகமாக்கியது என்பதையும் கவனித்துக் கொள்ள வேண்டும். அங்கு நடந்த இராணுவ ஆட்சிக்கவிழ்ப்பும் இதற்கு உதவியது. கனடிய, ஆஸ்திரேலிய, ஐரோப்பிய நாடுகளிலுள்ள அகதிகள் இப்படியான அட்டூழியங்களின் பலவந்தங்களால் வெளியேற்றப்பட்டவர்கள் என்பதால் இந்த நாடுகள் பங்களாதேசம் போல் ஆதரவு தர வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருக்கலாம். ஆனால் அதற்கான சாத்தியங்களை எடை போட வேண்டும்.

(வளரும்)



# கிருமிநாசினி விநியோகத்தின் ஏகபோக உரிமையை இரு பல்தேசிய நிறுவனங்களிடம் வழங்க அரசு முயற்சி

## ரஜித் கீர்த்தி தென்னகோன் எச்சரிக்கை



நாட்டுக்கான கிருமிநாசினி தேவைப்பாட்டில் 92 சதவீதமானவற்றை விநியோகிக்கும் உரிமையை இருபெரும் பல்தேசிய நிறுவனங்களிடம் வழங்குவதற்கான ஆயத்தங்கள் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் விளைவாக விவசாயிகள் வெகுவாகப் பாதிப்படையநேர்வதுடன் மாத்திரமன்றி, நாட்டின் விவசாயத்துறை பாரிய அழிவிற்கு முகங்கொடுக்கும் என்று ஊவா, மத்திய மற்றும் தென்மாகாணங்களுக்கான முன்னாள் ஆளுநர் ரஜித் கீர்த்தி தென்னகோன் எச்சரித்துள்ளார்.

இதுதொடர்பில்தெளிவுபடுத்தும்வகையில் முன்னாள் ஆளுநர் ரஜித் கீர்த்தி தென்னகோனால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு–

விவசாயம் மற்றும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் கிருமிநாசினிகளை விநியோகிப்பதற்கான உரித்தை இரண்டு பல்தேசிய நிறுவனங்களிடம் வழங்குவதற்கான முயற்சிகள் விவசாயத்துறை அமைச்சால் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இரசாயன உரத்தின் பயன்பாட்டை இல்லாதொழிப்பதற்கான கொள்கையின் ஊடாக அதற்குத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, தற்போது இரசாயன உரத்தை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

அதேபோன்று மறுபுறம் நாட்டுக்கான கிருமிநாசினி தேவைப்பாட்டில் 92 சதவீத மானவற்றை விநியோகிக்கும் உரிமையை இருபெரும் பல்தேசிய நிறுவனங்களிடம் வழங்குவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன்மூலம் கமநலசேவை மத்திய நிலையங்கள் ஊடாக விவசாயிகளின் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு அவசியமான கிருமிநாசினிகள் மற்றும் மருந்துகளைப் பணத்துக்கு விற்பனை செய்வதற்குத் தனியார் வர்த்தகர்கள் முயற்சிக்கின்றனர்.

சுதந்திர சந்தை செயற்பாடுகளில் தடைகளை ஏற்படுத்தி, தமக்கு நெருக்கமானவர்களைப் பயனடையச்செய்யும் நோக்கிலேயே அரசாங்கத்தால் இத்தகைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

கடந்த காலங்களில் இடம்பெற்ற மத்தியவங்கி பிணைமுறிமோசடி, சீனி மோசடி போன்று இதுவும் பட்டபகலில் இடம்பெறுகின்ற கொள்ளையாகும்.

விவசாயிகள் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு, அதற்கு அவசியமான கிருமிநாசினிகள் மற்றும் மருந்துப்பொருள்களை நீண்ட வரிசைகளில் நின்று கொள்வனவுசெய்து, மீண்டும் தமது பயிர்நிலங்களுக்குத் திரும்பும்போது அவைமுழுமையாகச்சேதமடைந்துவிடும் நிலையே காணப்படுகின்றது.

விவசாய அமைச்சின் செயலாளர் பேராசிரியர் உதித் ஜயசிங்க சேதன உரம் தொடர்பான ஒரு முகவராகச் செயற்பட்டார். ஆனால் இரசாயன உரத்தை இறக்குமதி செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டவுடன், ஏற்கனவே வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தவறானது என்றுகூறி அரசாங்கத்தின் கொள்கையைக் காட்டிக் கொடுத்தார்.

இவற்றிலிருந்து அரசாங்கத்திடம் எந்தவொரு துறைசார்ந்தும் நிலையானதொரு கொள்கை இல்லையென்பது தெளிவாகியுள்ளது.

எனவே தற்போதேனும் சேதன உரம் தொடர்பான 'நாடகத்தை' ஜனாதிபதி முடிவிற்குக்கொண்டுவரவேண்டும். அரசாங்கத்துக்கு நெருக்கமான குழுவினர் நாட்டின் விவசாயத்துறையை அழித்தொழிப்பதற்கு ஒருபோதும் இடமளிக்கக்கூடாது என்று ரஜித் கீர்த்தி தென்னகோன் அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

## சைவப்புலவராக சைவத்தமிழ் காவலராக வாழ்ந்து வழிகாட்டியவர் செல்லத்துரை

*ஈழத்திருநாட்டில் சைவப்புலவர் என்ற சொல்லால் அனைவரும் மதித்த ஆற்றலாளர் உயர் பண்பாளர் சைவத்துக்காக தன்னை அர்ப்பணித்து சைவ வாழ்வு வாழ்ந்த பெருந்தகை அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் உபதலைவர் சைவப்புலவர், கலாபூணம் சு. செல்லத்துரை கடந்த வியாழக்கிழமை இறையடியில் பிறவா இறவா நிலை பெற்றார். 1938.03.28 ஆம் திகதி மண்ணுலகில் உதித்தவர் .*

*நெஞ்சு கனக்கின்றது ஆற்றமுடியாத துயரம். சைவப்புலவர் சங்கத்தின் செயலாளராகதேர்வுச்செயலாளராக உபதலைவராக நீண்ட தசாப்தமாக சங்கத்துக்காகவே தன்னை அர்ப்பணித்து பணியாற்றி பல சைவப்புலவர்களை உருவாக்கிய ஆலமரம் சாய்ந்து விட்டது. செல்லத்துரைஐயா ஆழ்ந்தசைவசித்தாந்தப் புலமையும் சைவ வாழ்வியல் சிந்தனை அறிவுப்புலத்தையும் இலக்கிய இலக்கணத்தில் உயர் வித்தகராகவும் எந்த விடயத்தையும்எந்தவேளையிலும் தெளிவுபடுத்தி ஐயம் தீர்க்கும்அறிவுக்களஞ்சியம் ஓய்ந்து விட்டது.*

*- இவ்வாறு தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார் அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப் புலவர் செ.த.குமரன்.*

*அவரது செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -*

*சிறந்த அதிபராக சொல்வன்மை மிக்க பேச்சாளராக, சித்தாந்த வித்தகராக, அரிய நூல்களை ஆக்கிய விற்பன்னராக விளங்கிய பெருமகன்விடைபெற்றார். ஆயிரம்பிறைகண்ட வாழ்வு சித்தாந்த வகுப்பு நடத்தி தன்மாணவர்ஐயம்தீராத்து அறிவுப்பசி போக்கிய உயர் ஆற்றலாளன். எவர் ஐயத்தையும் தெளிவுபடுத்தும் திறமை இனி இவரைப் போல் யாரைக் காண்பது? என் செய்வது? எப்போதே முடிந்தகாரியம்விதியையார் அறிவார்காலம்தன்கணக்கை முடித்துக் கொண்டது.*

*திருமூலர் குருபூசை நாளில்விண்ணகஅழைப்பு சிவப்பணிக்கு சிவப் பரம்பொருளின்அழைப்பாகும் . கண்நிறைந்த சைவப் பொலிவுடைய அகபுறத் தோற்றம் காலம் கடந்தும் அகம் சுமக்கும். என்றும் மறக்கமுடியாது ஐயா உம் நினைவும் உம் பணியும். புன்முறுவலோடு அரவணைத்து ஆற்றுப்படுத்தி அறிவூட்டி ஆலோசனை வழங்கிபலரைவழிப்படுத்தி நல் ஆற்றல் கொண்ட புலவர்களைஉருவாக்கினீர். புலவர்எவ்வாறுவாழவேண்டும் என பக்குவமாய் பலருக்கும் எடுத்துக்காட்டியவர். எடுத்துக்காட்டோடு நில்லாது புலவனாக சைவக் காவலனாக வாழ்ந்து காட்டிச் சென்றுள்ளார. புலம்பி அழுது புரண்டு கதறினாலும் மறக்கமுடியாது உம் அன்பும் அரவணைப்பும்.*

*எப்போதே முடிந்த காரியம் . காலக்கணிப்பு நம்மை நாம் தேற்றுகின்றேம். உயர்சீலரின் ஆத்மா சிவன் தாழ்களில்நித்தியப் பெருவாழ்வு வாய்க்கப் பெறபிரார்த்திக்கின்றோம். துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெருவித்துக் கொள்கின்றோம்.*

# சைவப்புலவர் செல்லத்துரை இழப்பு கலையுலகம் ஈடுசெய்ய முடியாததே!

### இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் உமாமகேஸ்வரன் இரங்கல்

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வரலாற்றில், அதன் செயற்பாடுகளில் அர்ப்பணிப்பானதொரு வழிகாட்டியாக, நல்லதொரு ஆலோசகராகத் திகழ்ந்த பெருமகனாரை நாம் இன்று இழந்து நிற்கின்றோம். அமரர் சைவப்புலவர், கலாபூஷணம் சு.செல்லத்துரை ஐயாவின் இழப்பு, சைவத் தமிழர்களின் கலையுலகம் ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பு.

– இவ்வாறு தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு –

இந்த உலகில், வாக்கும் வாழ்வும் ஒருங்கே கூடிச் சிறப்பான வாழ்வு வாழ்வோர் பலருளர். அவர்களுள் ஒருவராய் வைத்தெண்ணிப் போற்றத்தக்க பெருந்தகையாளனாய் வாழ்ந்தவர் அமரர் சைவப்புலவர் கலாபூஷணம் சு.செல்லத்துரை ஐயா. ஈழத்திரு நாட்டில், சைவப்புலவர் என்றவுடன் எல்லோரும் சொல்லிய நாமம் இவர் பெயரென்பது இவர் வாழ்ந்த வாழ்விற்குக் கிடைத்த பெருமை.

'ஈழத்து நவீன நாடக உலகு, இந்த அரங்கியற் கலைஞருக்கு என்றும் கடமைப்பட்டுள்ளது' என்று கூறும் அளவிற்கு, அறுபதுகளில் அரங்கக் கலை வளர்த்த பெருங்கலைஞன். வலிகாமம் வடக்கின் அவைக்காற்றுக் கலையின் உந்து சக்தி இவரே! என யாவரும் ஏற்று நிற்பர். 1969 இல் ஈழத்துச் சிதம்பரத்தின் நிர்வாக நிதிக்காக நாடகம் அரங்கேற்றி இறைபணி செய்த இறை அன்பர்.

யாழ்ப்பாணம், இளவாலை மெய்கண்டான் வித்தியாலயத்தின் மாணவனாகத் திகழ்ந்த இவர், அதே பாடசாலையின் அதிபருமாகிப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்த பண்பாளன்.

சைவப் புலவரும் நல்லாசானும் நாடக வல்லாளருமாகிய கலாபூஷணம் சு. செல்லத்துரை ஐயா, சமய நாடகம், நாட்டிய நாடகம், இசை நாடகம், கூத்து, பஜனை, வில்லுப்பாட்டு என அத்தனை கலையிலும் தனக்கெனத் தனி முத்திரை பதித்தவர். கலாபூஷணம், சைவப்புலவர் சு.செல்லத்துரையின் முத்தான படைப்புகளாக திருமந்திர விருந்து, நற்சிந்தனைகள், வாக்கும் வாழ்வும்; வானொலி உரைத் தொகுப்பு, அரங்கப்படையல்கள் – தமிழ் நாடகங்கள், கோமாதா, வள்ளல் ஏழூர், வில்லிசைப் பாடல்கள் முதலானவை இன்றும் நின்று நிலைப்பவை.

சைவப்புலவர் சங்க உபதலைவராக, சைவப் புலவர் சங்கத்தின் செயலாளராக, தேர்வுச் செயலாளராக அரும்பணி ஆற்றி, சைவ சித்தாந்தப் புலவர்கள் பலரை உருவாக்கிய பெருமைக்குரியவர். திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்தப் பயிற்சி மையம், திருமந்திரப் பணி மன்றம், தெல்லிப்பழை, கலை, இலக்கியக் கழகம், சுகவாழ்வுப் பேரவை ஆகியவற்றின் வரலாற்றை இவரது பெயரை நீக்கி எழுதிவிட முடியாது என்னும் அளவிற்கு இவரது பணி மகத்தானது.

ஆண்டுதோறும் அமரத்துவமடைந்த தன் மனைவியின் பெயரால் அரிய பல நூல்களை வெளியிட்ட பெருமகன், திருமூலரின் திருமந்திரத்தில் ஆராக்காதலும் புலமையும் கொண்டிருந்த அன்னார் இறைபதம் அடைந்ததுவும் திருமூலரின் குருபூசை நன்னாளிலே என்பது இறை அநுக்கிரகம் பெற்ற அழைப்பு என்றே எண்ண வைக்கிறது.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா எம்பெருமானின் பாதார விந்தங்களில் சாந்நித்தியடைய வேண்டிப் பணிகின்றோம். – என்றுள்ளது.

# சகல பாடசாலைகளும் மூடப்பட்டிருந்த நிலைமையில் அதிகாரிகள் எதேச்சதிகாரத்துடன் செயற்படுகின்றனர்

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

வவுனியா கோட்டத்தின் சகல பாடசாலைகளும் மூடப்பட்டிருந்த நிலையில் அதிபர்களிடமிருந்து பாடசாலைதிறப்புக்களை கோரும் செயற்பாடானது எதேச்சதிகாரப் போக்கை வெளிப்படுத்துகின்றது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியா கிளை தெரிவித்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியா கிளை தலைவர் மற்றும் செயலாளரால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!

‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி – பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.




**1. கேள்வி:-** சுமந்திரன் தலைமையில் நடைபெற்ற மீனவர் வாழ்வாதாரப் போராட்டம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:-**அதுபற்றிச் சொல்வதற்கு முன்பு சுமந்திரன் ‘டான் ரீவிக்கு அளித்த பேட்டி




பற்றிச் சொல்லவேண்டும். அந்தப் பேட்டியில், தான் புதிய அவதாரம் எடுக்கத் தொடங்கியிருப்பதைச் சுமந்திரன் மெல்ல வெளிப்படுத்தியிருக்கிறார். இந்தப் போராட்டம் கூட்டமைப்பினரது போராட்டமும் அல்ல, தமிழரசுக்கட்சியினது போராட்டமும் அல்ல என்று சொல்லியிருப்பது, சம்பந்தர் ஐயாவின் நிர்வாகத்தில் இருந்த குறையையும் வெளிப்படையாக விமர்சித்திருப்பது, மற்றைய கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு விடாதது பற்றிய கேள்விக்கு அத்தலைவர்களின் முகத்திரையைக் கிழித்துத் துணிவாய்ப் பதில் சொல்லியிருப்பது என மனுஷன் அந்தப் பேட்டியில் உருவாடியிருக்கிறார். (அவருக்கு வேப்பிலை அடித்து உருவாட வைத்த அந்த தாடிக்காரப் பேட்டியாளரைத் தனியே பாராட்டவேண்டும். பேட்டி எடுப்பவரை நோகச் செய்யாமல் அதே நேரத்தில் உதட்டுச் சுழிப்புச் சிரிப்புக்குள் எதிராளியை உசுப்பேத்தும் அவரது பாணி அனைவரையும் ரசிக்க வைக்கிறது.)

> “ சம்பந்தர் பாகனிடம் சுமந்திரன் இதுவரை இருந்து வந்தார். இப்பொழுது யானைக்கு மதம் பிடிக்க ஆரம்பித்திருக்கிறது. இனி அது தன் (தனி) வழி செல்லும் போல் தெரிகிறது ”

இனி உங்களின் கேள்வி சம்பந்தமான எனது பதிலைத் தொடங்குகிறேன். இப்பொழுதுதான் சுமந்திரனுக்குத் தன்னுடைய பலம் என்ன என்று தெரிய வந்திருக்கிறது. வாலாக மட்டுமல்லாமல் தன்னால் தலையாகவும் இருக்கமுடியும் என்று காட்டத் தொடங்கியிருக்கிறார். பாகனிடம் அகப்பட்ட யானைக்குத் தன் பலம் தெரியாதென்பார்கள். அது போலத்தான் சம்பந்தர் பாகனிடம் சுமந்திரன் இதுவரை இருந்து வந்தார். இப்பொழுது யானைக்கு மதம் பிடிக்க ஆரம்பித்திருக்கிறது. இனி அது தன் (தனி) வழி செல்லும் போல் தெரிகிறது. சிறிதரன், சாணக்கியன் போன்றோரின் இணைப்பு, ஆற்றலாளர்களின் இணைப்பாய் மகிழ்வு தருகிறது. இப் பயணத்தைச் சுமந்திரன் என்றோ தொடங்கியிருக்கவேண்டும். இன்றாவது தொடங்கியதில் மகிழ்ச்சிதான். அறிவல்ல, ஆண்மைதான் தலைமையின் சரியான அடையாளம். அதனைச் சுமந்திரனிடம் கண்டு மகிழ்கிறேன். இது தொடரவேண்டும் என்றும் பிரார்த்திக்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன்:** ‘நான் ஆணையிட்டால் அது நடந்துவிட்டால்’ எங்கவீட்டுப்பிள்ளை எம்.ஜி.ஆர் சவுக்கைக்கையில் எ.டு.த்.தி.ட்.டா.ரு.ங்.கோ! சூப்பரோ சூப்பர்.

**2.கேள்வி:-**ஆயிரம்தான் சொல்லுங்கள், இலங்கை அரசின் மனித உரிமை மீறலுக்குச் சமமாக நமது புலிப் போராளிகளின் செயல்களையும் ஆராய அனுமதித்து சம்பந்தர் ஐயா கடிதம் எழுதியது தவறில்லையா?

**பதில் :-**யதார்த்தவாதி வெகுசனவிரோதி என்பார்கள். நானும் அத்தகைய வெகுசனவிரோதிகளின் வரிசையில் சேருவதாய் முடிவு செய்துவிட்டேன். அதனால் துணிந்து சொல்கிறேன். சம்பந்தர் ஐயா எழுதியதில் தவறில்லை என்பதுதான் என் கருத்து. நான் ஆயிரம் உண்மையைச் சொன்னாலும் நீங்கள் ஏற்கப்போவதில்லை. ஆனாலும் சில உண்மைகளைச் சொல்லவேண்டியது என் கடமையாகிறது.

போராளிகளால்தான் நம் ஈழமக்களின் உரிமைப் பிரச்சினை உலகளாவ விரிந்தது என்பது மறுக்கமுடியாத உண்மை. அந்த விடயத்தில் புலிகளின் பங்களிப்பு மிக முக்கியமானது என்பதையும் யாரும் நிராகரிக்க முடியாது. இந்தச் சாதனைக்காக உயிர் துறந்த இளைஞர்களின் தியாகத்தை யாரும் என்றும் மறுக்கப் போவதில்லை. மறுத்தால் அவர்கள் மனிதர்களாய் இருக்கப் போவதும் இல்லை.

ஆனால் இப்போதைய பிரச்சினை அதுவல்ல. ஆயுதப் போரில் நாம் தோற்றுவிட்டோம் என்பது யதார்த்த உண்மை. அந்த உண்மையை முதலில் நாம் நிதர்சனமாய்த் தரிசிக்கவேண்டும். வெறும் உணர்ச்சிக் கூச்சல்களால் ஒன்றும் ஆகப் போவதில்லை. உண்மையைத் தரிசித்தால்தான் நம் எதிர்காலத்தையாவது நாம் உறுதி செய்துகொள்ளலாம். இன்றைய நிலையில் பேரினவாதிகளிடமிருந்து நம்மைப் பாதுகாக்கும் ஒரே சக்தியாய்ச் சர்வதேசத்தின் கைகொடுப்பு மட்டும் தான் இருக்கிறது. இவ்வுண்மையை நாம் மறந்துவிடக்கூடாது.

நமது நாட்டில் நிகழ்ந்த போர்க்குற்றம் பற்றி ஆராய ஐ.நா.மனித உரிமை சபைச் செயலாளரால் தனிப்பட்ட ரீதியில் நியமிக்கப்பட்ட குழுவினால் வெளியிடப்பட்ட தருஷ்மன் அறிக்கை, அரசினரும் புலிகளும் மனித உரிமை மீறல்களைச் செய்திருக்கிறார்கள் என்ற செய்தியைப் பத்தாண்டுகளுக்கு முன்பே தெளிவாக உலக அரங்கில் பதிவாக்கிவிட்டது.

சர்வதேசம், மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கிற பொழுது, மனித உரிமையை எவர் மீறினாலும் அது அதனைக் கண்டிக்கத்தான் செய்யும். அதனையும் நாம் புரிந்து கொள்ளத்தான் வேண்டும்.

ஆயுதப்போராட்டத்தில் மனிதஉரிமை மீறல் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகிறது என்பது வேறு விடயம். ஆனால் சர்வதேசத்திடம் நீதி கோரும் நாங்கள் எதிரிகளை மட்டும் விசாரி!, எம்மவரை விசாரிக்காதே! என்று கோரிக்கை வைப்பதைச் சர்வதேச சமூகம் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளாது.

முக்கியமான ஒன்றை நாம் மறந்துவிடக்கூடாது. சர்வதேச சமூகம் பாதிப்புற்ற அப்பாவித் தமிழர்களுக்காகவே இன்றுவரை குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அக்குரல் புலிகளின் ஆதரவுக் குரல் அல்ல என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். நம்மைப் பொறுத்தவரை புலிகள் தியாகக் குழுவாய் இருக்கலாம். ஆனால் சர்வதேசம் அவர்களை அப்படிப் பார்க்காது.

ஒருவேளை நீங்கள் சர்வதேசத்தின் ஆதரவு புலிகளுக்கு இருந்ததே என்பீர்கள். அதிலும் நாம் ஒரு உண்மையைத் தெரிந்து கொள்ளவேண்டும். புலிகளை அழிக்கும் விடயத்தில் இருபதுக்கு மேற்பட்ட உலகநாடுகள் நம் அரசாங்கத்திற்கு உதவியதாய்ச் சொல்லப்படுகிறது. இதிலிருந்து சர்வதேச சக்திகள் புலிகளைத் தம் தேவைக்காய்ப் பயன்படுத்தினவே தவிர அவர்களது கொள்கையை அவை ஏற்றுக் கொள்ளவில்லை என்பது வெளிப்படையாகிறது.

இந்நிலையில் உலக அரங்கில் புலிகளின் மனித உரிமை மீறல்களை நியாயப்படுத்தி நம் இனத்திற்கான சர்வதேச சமூகத்தின் ஆதரவினை இழப்பதா? அல்லது சர்வதேசத்தின் நிபந்தனைகளை ஏற்று, நம் இனத்தை அவர்களின் துணையோடு பேரினவாதிகளிடமிருந்து காப்பதா? என்ற கேள்வி எழுமானால், இரண்டாவது நிலைக்குத்தான் நான் ஆதரவளிப்பேன்.

> “ கண்ணனை நம்பித் துகிலைக் கைவிட்ட பாஞ்சாலி போல், இன்று தனியாரிடம் விலை நிர்ணய உரிமையை விட்டுவிட்டுக் கைதூக்கி நிற்கிறது நம் அரசு. ஒரே ஒரு வித்தியாசம். பாஞ்சாலி கண்ணனை நம்பித் துகிலைக் கைவிட்டாள். நம் அரசோ கள்வரை நம்பிக் கைவிட்டிருக்கிறது ”

அதனைத்தான் சம்பந்தன் ஐயாவும் தன் கடிதம் மூலம் செய்திருக் கிறார். இவ்வளவும் ஏன்? இனமா? தனிமனிதர்களா? என்று கேள்வி எழுமானால், எந்த உண்மைப் போராளியும் கூட, இனத்தின் நன்மை என்ற முடிவுக்குத்தான் வருவான் என்பது நிச்சயம். அதனால்தான் சம்பந்தன் ஐயா எழுதிய கடிதத்தில் பிழை இல்லை என்று துணிந்து சொல்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன்:** இவர் எழுதியவருக்காகப் பேசுகிறாரா? கையொப்பமிட்டவருக்காகப் பேசுகிறாரா? யாம் அறியோம் பராபரமே ஹி…ஹி…

**3. கேள்வி:-**வியாபாரிகளின் இஷ்டத்திற்கு விலை உயர்வைத் தீர்மானிக்க விட்டிருக்கிறார்களே! நாடு உருப்படுமா?

**பதில்:-**அந்த அநியாயத்தை ஏன் கேட்கிறீர்கள்! அனைத்தும் என் கட்டுப்பாட்டிற்குக் கீழ்தான் எனக் காட்ட விரும்பிய நம் புதிய அரசாங்கம், மக்கள் நலம் காப்பதாகச் சொல்லி இராணுவத் துணையோடு ஒரு புதுவிதமான நிர்வாகத்தை நடத்த முனைந்தது. மக்களின் உணர்வை நிராகரித்து, அவர்கள் பல விடயங்களில் காட்டிய கெடுபிடிகள் பலரையும் முகம் சுழிக்க வைத்தன. அந்தக் கெடுபிடிகளில் கடுமையான விலைக்கட்டுப்பாடுகள் விதித்ததும் ஒன்றாயிற்று. இன்று அனைத்தும் கைமீறிய நிலையில் ஏதும் செய்யமுடியாமல் தடுமாறி, வைத்தால் குடுமி என்று கோஷமிட்டவர்கள் இன்று சிரைத்தால் மொட்டை என்ற நிலைக்கு வந்துவிட்




டார்கள். கண்ணனை நம்பித் துகிலைக் கைவிட்ட பாஞ்சாலி போல், இன்று தனியாரிடம் விலை நிர்ணய உரிமையை விட்டுவிட்டுக் கைதூக்கி நிற்கிறது நம் அரசு. ஒரே ஒரு வித்தியாசம். பாஞ்சாலி கண்ணனை நம்பித் துகிலைக் கைவிட்டாள். நம் அரசோ கள்வரை நம்பிக் கைவிட்டிருக்கிறது. வியாபாரிகளுக்குத் தமது இலாபம்தான் முக்கியம். மக்கள் நலம் முக்கியமில்லை. மக்கள் நலம் காக்கவேண்டிய அரசே அத்தகைய வியாபாரிகளிடம் விலை நிர்ணய உரிமையைக் கொடுத்துவிட்டு நிற்பதென்பது, அரசின் வீழ்ச்சிக்கான கட்டியம்தான் என்பதில் எந்த ஐயத்திற்கும் இடமில்லை.

**உலகநாதரின் ஒப்பீனியன்:** ‘நித்தம் நித்தம் மாறுகின்றதெத்தனையோ நெஞ்சில் நினைப்பதிலே நடப்பது தான் எத்தனையோ, கோடு போட்டு வாழ்ந்தவர்கள் எத்தனையோ கொண்ட குறியும் தவறிப்போனவர்கள் எத்தனையோ…!’

**4.கேள்வி:-**மற்றவர்களைப் போல் அல்லாமல் நான் யாழ் மண்ணில் இருந்தே என் மக்களுக்காகப் பாடுபடுவேன். என்று வாய்ச்சவடால் விட்ட முன்னாள் முதலமைச்சரை இப்போதெல்லாம் யாழின் பக்கம் காண்பதே அரிதாய் இருக்கிறதாமே? அவருக்குக் கொடி பிடித்தவர்கள் இப்போ என்ன சொல்லப் போகிறார்கள்?

**பதில்:-**எனக்கு எப்போதுமே ஏமாற்றுகிறவர்களை விட, ஏமாறுகிறவர்களில் தான் அதிகம் கோபம் வரும். தன்னை அரசியலுக்கு அழைத்து வந்த கட்சி

> “ கோளாறுக்கு மேல் கோளாறுகள் செய்த முன்னாள் முதலமைச்சரை அவரது பொய்மையான வார்த்தைகளை நம்பி ஆதரித்து நாடாளு மன்றத்திற்கு அனுப்பி வைத்த தமிழ் மக்கள் மீதுதான் எனக்குக் கோபம் வருகிறது ”

யையே குற்றம் சாட்டி அதன் உடைவுக்குக் காரணமாய் இருந்தது, பாரபட்சமாக நடந்தது, பிழையானவர்களைத் தன் அருகிருத்திக் கொண்டது, ஆட்சிக் காலத்தில் எந்த ஒன்றையும்

☞ 10

காலைக்கதிர் Kalaikkathir



இந்தவாரம் இவர்

ஆக்கம் - ப்ரியமதா பயஸ்

# இலங்கை அரசியல் வரலாற்றில் முக்கிய நபரான விக்னேஸ்வரன்

## (இன்று 82 ஆவது பிறந்தநாள் காணும் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களுக்கு வாழ்த்துகள்)

இலங்கைத் தமிழ் உச்சநீதிமன்றத்தின் இளைப்பாறிய நீதிபதியும், அரசியல்வாதியும், நாடாளுமன்ற உறுப்பினரும், வடக்கு மாகாண சபையின் முதலாவது முதலமைச்சரும், மாவட்ட நீதிமன்றம், உயர் நீதிமன்றம், உச்சநீதிமன்றம் ஆகியவற்றின் நீதிபதியாகவும், நீதித் துறை நடுவராகவும் பணியாற்றிய கனகசபாபதி விசுவலிங்கம் விக்னேஸ்வரன் (சி.வி. விக்னேஸ்வரன்) அவர்கள் இன்று இந்தவாரம் இவர் பகுதியில் இடம்பிடிக்கிறார்.

1939 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 23 ஆம் திகதி (அதாவது இன்று) பிறந்த விக்னேஸ்வரன் 2013ஆம் ஆண்டு முதல் 2018 வரை இலங்கை வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் பதவியில் இருந்தார்.ஆனாலும் இவர் தனது பதவிக்காலத்தில் சரியான வழிப்படுத்தலில், வடக்கு மாகாணசபையை நடத்தவில்லை என்றும், அவரது பதவியை தமிழ் மக்களுக்கு உரியவாறு பயன்படுத்தவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு இவரின்மீது இருந்து வந்தாலும் இவர் 2020 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டணி என்ற புதிய அரசியல் கட்சியை உருவாக்கிபோட்டியிட்டுவெற்றி பெற்றார்.

2011ஆம் ஆண்டு செப்ரெம்பரில் நடைபெற்ற வட மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு 1,32,255 விருப்பு வாக்குகள் பெற்று வெற்றி பெற்று முதலாவது மாகாண சபையின் முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்ட விக்னேஸ்வரன் 2018 ஒக்ரோபர் 24 இல் முதலாவது வட மாகாணசபையின் காலம் முடியும் வரை முதலமைச்சராகப் பதவி வகித்தார். தனது பதவிக்காலம் முடிவடைந்த பின்னர், அடுத்த நாளே அதாவது ஒக்ரோபர் 25 ஆம் திகதியே விக்னேஸ்வரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலகி, தமிழ் மக்கள் கூட்டணி என்ற பெயரில் புதிய கட்சியை 2018 ஒக்ரோபர் 25 இல் ஆரம்பித்தார்.

கொழும்பு புதுக்கடையில் பிறந்த விக்னேஸ்வரன் யாழ்ப்பாணம், மானிப்பாயை பூர்வீகமாகக் கொண்டவர் அரசியலில் இவர் 2011 ஆம் ஆண்டு கால எடுத்து வைக்கும்போது ஒரு முன்னாள் நீதியரசராக இவர் தமிழ் மக்களுக்கும் தமிழ் அரசியல் ஸ்திர தன்மைக்கும் பெரும் பணியாற்றுவார் என மக்களால் எதிர்பார்க்கப்பட்டது, ஆனாலும் ஒரு நீதியரசரின் கீழ் அமைந்த அமைச்சரவையில் தொடக்கம் முதல் இறுதிவரை இழுபறிகளும், ஊழல்களும், பதவி விலக்கல்களும், பதவி விலகல்களும் மட்டுமே தலைவிரித்தாடின.இதனால் வடக்கு மாகாண சபையின் குறிப்பிட்டு சொல்லக்கூடிய முக்கிய அபிவிருத்தி செயல்பாடுகள் இடம்பெறாமைதான் இன்று வரை மக்கள் மத்தியில் பதிவாக இருப்பது குறிப்பிட வேண்டியது.

விவசாயம், கல்வி மற்றும் இன்னோரன்ன விடயங்களில் வடக்குமாகாண சபையின் ஏனைய உறுப்பினர்களும் சோபிக்காமல் போனமைக்கு விக்னேஸ்வரன் காரணமாக இருந்தாரோ என்கின்ற ஐயப்பாடுகயே இப்போதுவரை நிலவுகின்றது.

1979 ஆம் ஆண்டு மே மாதம் 7 ஆம் திகதி இலங்கையின் நீதித்துறையில் இணைந்த விக்னேஸ்வரன் மட்டக்களப்பு, சாவகச்சேரி, மல்லாகம் ஆகிய நீதிமன்றங்களில் நீதிபதியாகவும், மாவட்ட நீதிபதியாகவும் பணியாற்றினார். ஜனவரி 1987ஆம் ஆண்டு கொழும்பு மாவட்ட நீதிபதியாக நியமனம் பெற்ற விக்னேஸ்வரன் 1988 ஆம் ஆண்டில் உயர் நீதிமன்ற நீதியரசராகப் பதவியேற்று,வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா, மற்றும் மேல் மாகாணங்களில் பணியாற்றினார். 1995ஆம் ஆண்டு இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசரானார்.



பின்னர் 2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம் உச்சநீதிமன்ற நீதியரசராக விக்னேஸ்வரன் நியமிக்கப்பட்டார் 2004 ஆம் ஆண்டு நீதியரசர் பதவியில் இருந்து இளைப்பாறி 9 வருடங்களுக்கு பின்னர் 2011 ஆம் ஆண்டு அரசியலில் காலடி எடுத்து வைத்தார், தமிழ் தேசிய கூட்டமைப்பில் முக்கிய அங்கம் வகிக்கும் தமிழரசுக் கட்சியினர் முன்னாள் நீதியரசர் என்ற முக்கியத்துவத்துடன் விக்னேஸ்வரனை அரசியல் களத்தில் இறக்கினர்.

2013 செப்ரெம்பர் 21 இல் இடம்பெற்ற வட மாகாணசபைத் தேர்தலில் இவர் அதிகூடிய விருப்பு வாக்குகளாக 132,255 வாக்குகளை பெற்று முதலாவது நிலைக்கு வந்தார். இது இலங்கையின் நாடாளுமன்ற, மாகாணசபைத் தேர்தல்களில் தமிழர் ஒருவர் பெற்ற அதிகளவு விருப்பு வாக்குகளாகும். 2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7 ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முன்னிலையில் கொழும்பில் அலரிமாளிகையில் முதலாவது வட மாகாண சபையின் முதலமைச்சராகப் பதவியேற்றார்.

2015 ஆம் ஆண்டில் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர்களான இரா. சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், மாவை சோ. சேனாதிராஜா ஆகியோருடன் கொள்கையளவில் முரண்பட்ட விக்கினேஸ்வரன். 2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் உண்மையான தமிழ் தேசியவாதிகளுக்கு வாக்களிக்குமாறு தமிழ் தேசிய வாக்காளர்களைக் கேட்டுக் கொண்டார். வட மாகாணசபையில் விக்னேஸ்வரனின் நிர்வாகத் திறமைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் கேள்விக்குள்ளாக்கினர். டிசெம்பரில் தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பை உருவாக்கி அதன் இணைத் தலைவ ரானார். தமிழ் சமூகக் குழுக்கள், சமயத் தலைவர்கள், கல்விமான்கள், சில சிறிய அரசியல் கட்சிகள் அடங்கிய இவ்வமைப்பு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எந்த விதத்திலும் போட்டியாக இராது என உறுதியளிக்கப்பட்டது.



2020 பெப்ரவரியில், விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி 2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஏனைய மூன்று சிறிய அரசியல் கட்சிகளுடன் இணைந்து தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்ற அரசியல் கூட்டணியை ஆரம்பித்தது. விக்னேஸ்வரன் இக்கூட்டணியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த கட்சியில் விக்னேஸ்வரன் மட்டுமே இத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்றம் சென்றார்.

## இனி இது...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்.மாவட்டத்தில் 'அமுல்பேபி அண்ட் கோவுக்கு சல்யூட் அடிப்பதே மகேசன் சேவை' என்றளவுக்கு கோமாளித்தனமாகி விட்டது.

இந்த வீட்டுத் திட்டப் பயனாளிகள் தெரிவில் உச்சக் குளறுபடி சாவகச்சேரி பிரதேச சபையிலேயே அரங்கேறியது என்பதும் தெரிந்ததே.

முறையீடுகள், மீள் முறையீடுகள், மீளாய்வுகள் என்று திரும்பவும் திரும்பவும் செய்து, கடைசியாக ஒரு பட்டியல் தயாரானது. அதிலும் குளறுபடி என்று குற்றம் சுமத்தப்பட்டதால் அரச அதிபர் இந்த விடயத்தை பரிசீலித்து, விசாரணை நடத்தி, உண்மைகளைக் கண்டறிந்து, சரியான பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக மூன்று உயரதிகாரிகள் கொண்ட ஒரு குழுவை நியமித்தார். நடு நிலையானவர்கள் என சமூகத்தில் மதிக்கப்படும் மேற்படி மூன்று உயரதிகாரிகளும் தமது ஆளணியுடன் இரண்டு வாரங்கள் நேரடியாக களவிஜயம் செய்து, நுணுகி, துருவித் துருவி விடயங்களை விசாரித்தனர். மேலும் குளறுபடிகள் அம்பலமாகின.

அந்தப் பிரதேச செயலர் பிரிவில் தலா பத்து லட்சம் ரூபா வீட்டுத் திட்ட உதவி பெறுவதற்கு 163 பேரும், தலா ஆறு லட்சம் ரூபா உதவித் திட்டம் பெறுவதற்கு 84 பேரும் பயனாளிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர்.

ஒவ்வொரு விலாசமாகச் சென்று விசாரணை நடத்திய உயரதிகாரிகள் குழு, முதல் பட்டியலின் 163 இல் 27பேரும், அடுத்த பட்டியில்ல 84 பேரில் 49 பேரும் உதவி பெறத் தகுதியற்றவர்கள் என்று அடையாளப்படுத்திக் கண்டு பிடித்தது.

இந்த 76 இடங்களுக்கும் உண்மையில் தகுதி பெற்றவர்களின் புதிய பட்டியலையும் அரச அதிபருக்குத் தாம் சமர்ப்பித்த தமது பரிந்துரையில் இணைத்த அதிகாரிகள் குழு, அவர்களுக்கு திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான முதல் கட்டக் கொடுப்பனவை வழங்கவும் சிபாரிசு செய்தது.

அதனை ஏற்ற அரச அதிபர் அதன்படி மாற்றப்பட்ட 76 பயனாளிகளையும் உள்ளடக்கிய புதிய பட்டியலின் பிரகாரம் முதல் கட்டக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

அவ்வளவுதான். பிரதேச செயலக அம்மணிமார் உரிய தரப்புக்கு முறையிட்டார். நேற்று 'ஓடர்', மாறியது. நேற்றுமுன்தினம் அனுப்பப்பட்ட 'ஓடர்' இடை நிறுத்தப்பட்டிருப்பதாகப் பிரதேச செயலருக்கு - அவர் எதிர்பார்த்த செய்தி - நேற்றுக் கிடைத்தது.

அமுல் பேபி அண்ட் கோவுக்குக் கைகட்டி சேவகம் செய்வதில் அம்மணி உஷாராக இருப்பதால், வீட்டுத் திட்ட உதவி பெறத் தகுதியுடைய ஏழைப் பயனாளிகள் பாவம். வீதியில் நிற்கிறார்கள். எல்லாப் பொல்லாப்பும் அந்த மகேசன் மீது தான்....!

– மின்னல் –

---

## 12 பேர் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்ட இந்தச் சாவுகளில் 05 பெண்களும், 07 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 574 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் நேற்று 552 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 34 ஆயிரத்து 975 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 276 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 2 ஆயிரத்து 740 ஆக அதிகரித்துள்ளது.

## அமைச்சுக் கூட்டத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்.மாவட்ட எம்.பி. சி.சிறிதரன், கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற காணி அபகரிப்பு மற்றும் கிளிநொச்சியில் ஆனைவிழுந்தான், ஜெயபுரம் பகுதிகளின் ஆக்கிரமிப்புகள் தொடர்பில் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவந்த போது அரச தரப்பின் புத்தளம் மாவட்ட எம்.பியான மாயாதுன்ன சிந்தக அமல், சிறிதரனைப் பார்த்து 'புலி.... புலி' எனச் கூச்சலிட்டு அவரின் கருத்துக்கு இடையூறுகளை ஏற்படுத்தினார்.

இந்த எம்.பியின் புலிக்கூச்சலுக்குக் கடுமையான எதிர்ப்பை வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்கள், 'நாங்கள் புலிகள் என்றால் எங்களை ஏன் கூட்டத்துக்கு அழைத்தீர்கள். எமது மாகாணத்தின், மாவட்டத்தின், மக்களின் பிரச்சினைகளைப் பேசினால் புலி எனக் கத்தும் உங்களிடம் நாம் எவ்வாறு நியாயத்தை எதிர்பார்க்க முடியும்?' எனக் கேள்வி எழுப்பிவிட்டு, இந்தக் கூட்டத்தில் இனி நாம் பங்கேற்கமாட்டோம் எனக் கூறி வெளிநடப்புச் செய்தனர்.

இதன்போது அரசின் பங்காளிக் கட்சி எம்.பியான சந்திம வீரக்கொடி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களுக்கு ஆதரவாகக் குரல் எழுப்பியமையுடன், அவர்கள் தமது மக்கள் தொடர்பில் பேசுவதற்கு உரிமை உண்டு எனச் சுட்டிக்காட்டினார். எனினும், விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் கூட்டத்தில் பங்கேற்ற ஏனைய எம்.பிக்கள் மௌனம் சாதித்தனர்.

இந்த விடயத்தை பின்னர் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பியான எம்.ஏ. சுமந்திரன் தமது உரையில் விவரித்தார். சபாநாயகரின் கவனத்துக்கு அதனைக் கொண்டு வந்தமையுடன் தமது கடுமையான கண்டனத்தையும் எதிர்ப்பையும் வெளியிட்டார்.

---

## வடமராட்சி மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதேவேளை, எல்லை தாண்டிய இலங்கை மீனவர்கள் இருவரைத் தாம் கைதுசெய்துள்ளமையை இலங்கைக் கடற்படையினருக்கு இந்தியக் கடற்படையினர் நேற்றிரவு அறிவித்துள்ளனர்.

---

## இந்திய மீனவரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போதும் ஒருவர் காணாமல்போயிருந்தார். இவ்வாறு காணாமல்போன இந்திய மீனவரைத் கடற்படையினர் 18ஆம் திகதி இரவு மற்றும். 19ஆம் திகதிகளில் தேடுதலில் ஈடுபட்டு 20 ஆம்திகதி நண்பகல் காணாமல்போன இந்திய மீனவர் இலங்கை கடற்படையினரால் உயிரற்ற உடலமாக மீட்கப்பட்டு காங்கேசன்துறை கடற்படை தளத்திற்கு கொண்டு வரப்பட்டது.

அவ்வாறு காங்கேசன்துறைக்கு கொண்டுவரப்பட்ட உடலை காங்கேசன்துறைக்கு சென்ற தடயவியல் பொலிஸார் மற்றும் நீதிபதி சடலத்தை பார்வையிட்டனர். பிரேத பரிசோதனைக்காக உடலத்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்க உத்தரவிடப்பட்டது.

இதன் பிரகாரம் 20ஆம் திகதி மாலை காங்கேசன்துறை துறைமுகத்தில் இருந்து போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரவு பிரேத பரிசோதனையும் இடம்பெற்று நீரில் மூழ்கியதனால் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்ட நிலையில் அதன் அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பித்து உடலம் தமிழகம் அனுப்புவதற்கான பணி இடம்பெற்றது. இருந்தபோதும் உயிரிழந்த மீனவனுடன் பயணித்த ஏனைய இரு மீனவர்களையும் விடுவிக்குமாறு விடப்பட்ட கோரிக்கையால் விடயம் கால தாமதம் கண்டது.

இந்தத் தாமதம் தமிழக மீனவர்களின் போராட்டங்கள் அதிகரிக்கக் காரணமானதால் இன்று உயிரிழந்த தமிழக மீனவரின் உடலம் மட்டும் காங்கேசன்துறை ஊடாக இலங்கை கடற்படையினர் காலை 9 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு இந்திய கடற்படையிடம் உடலம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இவ்வாறு ஒப்படைக்கும் உடலம் இன்று பகல் 2 மணியளவில் உயிரிழந்தவரின் உறவுகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

## இழுவை மடி மீன்பிடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பில் கண்மூடித்தனமான சிந்தனைகள் எம்மத்தியில் காணப்படுகின்றன. உலகில் இரண்டு நாடுகள் மட்டுமே இழுவைப் படகைத் தடை செய்துள்ளன.

அடி மடி என்பதுதான் தவறானது. அது கடலின் அடி வரையுள்ள வளங்களை சுரண்டுவதன் மூலம் சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படுகின்றது. மீன்வளம் முழுவதுமாக அழிக்கப்படுகின்றது. ஆழம் குறைந்த பகுதிக்கு வரும்போதே இந்தப் பிரச்சினை உருவாகின்றது. அடி முறையைத் தடை செய்யுங்கள். இழுவை மடி முறையைத் தடைசெய்ய வேண்டாம் என்று நான் வடக்கு மாகாண சபையிலும் தெளிவாகக் கூறியிருந்தேன்.

சிலர் நினைத்தார்கள் நான் ஒரு சிலருக்காக ஆதரவாக இருக்கின்றேன் என்று. நல்லாட்சி அரசின் காலப்பகுதியில் ஏன் இந்த இழுவை மடி முறையைத் தடை செய்யவில்லை?

இந்திய, இலங்கை அரசுகள், இரு நாட்டு மீனவர்களையும் எல்லை தாண்டாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். கடலோரக் காவல் படை, கடற்படை என்பன நவீன முறைகள் கொண்டிருந்தும் கூட இருநாட்டு மீனவர்களும் எல்லை தாண்டுவதைத் தடுக்க முடியவில்லை.

இரு நாட்டு மீனவர்களுக்கும் முரண்பாடுகள் ஏற்படுகின்றன. இதனைத் தவிர்க்க வேண்டும். இரு நாட்டு அரசுகளும் பேசி இதற்கு முடிவுகட்ட வேண்டும். இரண்டு பகுதியிலும் உயிர்ச் சேதங்கள் வரக் கூடாது.

மீனவர்கள் தவறு செய்தால் அவர்களைக் கைது செய்யுங்கள். அவர்களை அடிப்பதோ துன்புறுத்துவதோ உங்களுடைய பணி அல்ல. தென்னிலங்கை மீனவர்கள் வடபகுதி கடலில் தொழில் செய்கின்றார்கள் இதனை அனுமதிக்க முடியாது.

எங்கள் நாட்டு மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு இலங்கை அரசுக்குரியது. அதைப்போல் இந்திய மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது இந்திய அரசின் பொறுப்பு.

எமக்காகக் குரல் கொடுக்கும் தமிழக மக்களுக்கு, மீனவர் பிரச்சினையை வைத்து எங்களுக்கு எதிராகத் திசை திருப்புவதை அனுமதிக்க முடியாது.

அடி முறையை தடை செய்யுங்கள்; இழுவை மடி மீன்பிடி முறையை விஞ்ஞான முறைப்படி அனுமதியுங்கள் - என்றார்.

---

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொற்றால் ஏற்பட்ட முதலாவது மரணமாகும்.

காலி – கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த எல்பிட்டிய பகுதியை சேர்ந்த 56 வயதான நபரே கறுப்பு பூஞ்சை தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார் என கராப்பிட்டிய வைத்தியசாலையின் சட்ட வைத்திய விசேட நிபுணர் ரொஹான் பீ. ருவன்புர தெரிவித்தார்.

கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், கடந்த செப்டம்பர் மாதம் 29 ஆம் திகதி குறித்த நபர் உயிரிழந்துள்ளார்

சடலம் மீதான பிரேத பரிசோதனையை மேற்கொண்ட உதவி சட்ட வைத்திய அதிகாரி தன்தெனிய ஆராய்ச்சி, மேலதிக பரிசோதனைக்காக உடற்பாகங்களை அரச மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்துக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அதற்கமைய, நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட மேலதிக பரிசோதனை அறிக்கைக்கு அமைய, உயிரிழந்த நபரின் சுவாசப்பையை அண்மித்த பகுதியில் கறுப்பு பூஞ்சை தொற்றியிருந்தது என அரச மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பூஞ்சை நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் பிரிமாலி ஜயசேகர உறுதி செய்துள்ளார்.

கொரோனா நிமோனியாவுடன் தொடர்புடைய கறுப்பு பூஞ்சை தொற்றுக்குள்ளானவர்கள் இதற்கு முன்னர் அடையாளம் காணப்பட்ட போதிலும், இதனால் உயிரிழந்த முதலாவது நபராக குறித்த நபர் காணப்படுகின்றார் என்று கராப்பிட்டிய வைத்தியசாலையின் சட்ட வைத்திய விசேட நிபுணர் ரோஹான் பீ. ருவன்புர தெரிவித்துள்ளார்.

## ஓட்டோ சாரதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரிவினரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், வன்முறையில் ஈடுபட்டோர் வாடகைக்கு அமர்த்திச் சென்ற ஓட்டோவின் சாரதியும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்த 11 பேர் கொண்ட கும்பல் வீடொன்றுக்குள் புகுந்து அட்டூழியத்தில் ஈடுபட்டது. இந்தச் சம்பவத்தில் கதிர்காமநாதன் குணரட்ணசிங்கம் (வயது 58) என்பவர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வீட்டு யன்னல்கள், மோட்டார் சைக்கிள் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஹைஏஸ் வாகனத்தின் கண்ணாடி என்பன அடித்துடைத்து சேதம் விளைவிக்கப்பட்டன.

சம்பவம் தொடர்பில் ஏனைய 9 பேர் தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

---

## யாழில் பலரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோரைச் சந்தித்த புதிய ஆளுநர், ஆளுநர் அலுவலகம் முன்பாக போராட்டம் நடத்தி வரும் வடக்கு மாகாண சுகாதார தொண்டர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலுள்ள சிறைச்சாலைக்கும் சென்ற ஆளுநர், அங்குள்ள நிலமைகளைக் கேட்டறிந்தார்.

---

## சகல ஆரம்பப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதன்படி, 200 இற்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட தரம் 1 முதல் 5ஆம் தரம் வரையான ஆரம்பப் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் தொடங்கும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

---

## பாட்டும் நானே...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சாதிக்காமல் விட்டது, மற்றவர்களைக் குறை சொல்வதிலேயே காலம் கழித்தது, கடைசி நாள் வரை தன் பதவிச் சுகத்தை அனுபவித்து விட்டு பதவி போன மறுநாளே புதுக்கட்சி ஆரம்பித்தது என கோளாறுக்கு மேல் கோளாறுகள் செய்த முன்னாள் முதலமைச்சரை அவரது பொய்மையான வார்த்தைகளை நம்பி ஆதரித்து நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைத்த தமிழ் மக்கள் மீதுதான் எனக்குக் கோபம் வருகிறது. எத்தனை காலம் தான் இந்த இனம் இப்படி ஏமாறப்போகிறதோ?

**உலகநாதரின் ஒப்பீனியன்:** 'கண்டா வரச் செல்லுங்கா, கையோட கூட்டி வாருங்க, அவரை கண்டா வரச்செல்லுங்கா, கையோட கூட்டி வாருங்க...'

**5.கேள்வி:-** புலம்பெயர் தமிழர்களால் அவர்கள் வாழும் நாடுகளிலெல்லாம் நம் தமிழ்மொழி தொடர்ந்து வாழும் என்று நினைக்கிறீர்களா?

**பதில்:-** வாழவேண்டும் என்று நினைக்கிறேன்! ஆனால் யதார்த்த நிலைமைகளைப் பார்த்தால் அப்படி நடக்கும் என்று தோன்றவில்லை. இங்கிருந்து போனவர்கள், காட்டுகிற தமிழ் உணர்ச்சி யில் எல்லாம் உண்மை இருப்பதாய்த் தெரியவில்லை. அங்கு சென்ற பெரும்பான்மையினர் தம் பிள்ளைகளை வெள்ளைக்காரர்களாய் ஆக்கத்தான் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கு தோன்றியிருக்கும் நம் புதிய தலைமுறையும் அப்படித்தான் வாழ நினைக்கிறது. அங்கு அவர்கள் செய்யும் கலை, இலக்கிய முயற்சிகள் எல்லாம் அந்நாட்டவர்களிடம் எம்மைத் தனித்துக் காட்டும் முயற்சியாகவே தோன்றுகிறது. அங்கு நம் தமிழ்மொழி நிலைக்கவேண்டுமானால் முதலில் வீட்டில் அனைவரும் தமிழ்மொழியைப் பேசிப்பழகட்டும். அதுவே இல்லாமல் தமிழ் அங்கு வாழும் என நினைப்பது கற்பனைதான்.

**உலகநாதரின் ஒப்பீனியன்:** செந்தமிழ் வாய் திறந்து பேசிடுவாய்! ஹி..ஹி..!

காலைக்கதிர் Kalaikkathir







# விவசாயிகளுக்கு நீதி வேண்டி சபைக்குள் எதிரணி போராட்டம்

## அரசுக்கு எதிரான கோஷங்களால் நேற்று அதிர்ந்தது நாடாளுமன்றம்

**விவசாயிகள் எதிர்நோக்கும் தற்காலப் பிரச்சினைக்கு நீதி வேண்டி நாடாளுமன்றத்தில் நேற்று எதிரணி எம்.பிக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

**நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நாடாளுமன்றம் கூடியதைத் தொடர்ந்து, மனுக்கள் சமர்ப்பிப்பு மற்றும் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் பின்னர் தினப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.**

இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 'விவசாயிகளுக்கான உரத்தை உடனடியாக வழங்கு' என்று கோரி சபை நடுவே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்துக்கு எதிரணியிலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட சகல கட்சிகளின் எம்.பிக்களும் தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

அரசுக்கு எதிராக எதிரணியினர் எழுப்பிய கோஷங்களால் சபை அதிர்ந்தது. இதன்போது ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டதுடன், சபையில் அமைதியின்மையும் நிலவியது.

# மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை ஒக். 31இல் நீக்கம்!

## இராணுவத் தளபதி அறிவிப்பு



நாட்டில் தற்போது அமுலில் உள்ள மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடையை நீக்குவதற்குக் கொரோனாத் தடுப்புச் செயலணி தீர்மானித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 31ஆம் திகதி அதிகாலை 4 மணியுடன் மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடை நீக்கப்படும் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று அறிவித்துள்ளார்.

அத்துடன் கல்வி, சுகாதார மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளின் முன்னிலைப் பணியாளர்களுக்கு மூன்றாம் தடுப்பூசியை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று இராணுவத் தளபதி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ரிஷாத்தின் மேன்முறையீட்டு மனு பெப்ரவரி மாதம் விசாரணைக்கு

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனால் முன்வைக்கப்பட்ட மேன்முறையீட்டு மனுவை அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி விசாரணைக்கு எடுக்குமாறு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

வில்பத்து வனப்பகுதியை அண்மித்த பிரதேசங்களிலுள்ள கல்லாறு காட்டுப் பகுதியில் தேவையற்ற ரீதியில் நிர்மாணங்களை மேற்கொண்டதாக அவர் மீது முன்வைக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டு தொடர்பான வழக்கில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிஷாத் பதியுதீன் எம்.பிக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள உத்தரவை நீக்குமாறு கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

வில்பத்து வனப்பகுதியை அண்மித்த கல்லாறு மற்றும் மறிச்சுக்கட்டி ஆகிய வனப்பகுதிகளில் தேவையின்றி கட்டட நிர்மாணங்களை மேற்கொண்டமைக்கு எதிராக சுற்றுச் சூழல் நீதி மையத்தால் கடந்த 2015ஆம் ஆண்டு அப்போது அமைச்சராக இருந்த ரிஷாத் பதியுதீன் எம்.பிக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நவம்பர் மாதம் தொடக்கம் பூஸ்டர் தடுப்பூசியாக பைஸர்

## முதலில் முன்கள துறைகளில் உள்ளவர்களுக்கு




அடுத்த மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் முன்களத் துறைகளில் பணியாற்றுவோருக்குக் கொரோனாத் தடுப்பூசியின் மூன்றாம் டோஸ் (பூஸ்டர்) தடுப்பூசியாக பைஸர் தடுப்பூசியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொரோனாப் பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையத்தின் பிரதானி இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா இதனை நேற்று அறிவித்துள்ளார்.

அதற்கமைய சுகாதாரப் பிரிவினர், முப்படை, பொலிஸார், சுற்றுலாத் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் உள்ளிட்ட முன் கள ஊழியர்களுக்கு மூன்றாவது டோஸாக பைஸர் தடுப்பூசியை வழங்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்ள இருபது வய துக்கு மேற்பட்ட அனைவருக்கும் கொரோனாத் தடுப்பூசியின் மூன்றாவது டோஸாக பைஸர் தடுப்பூசியை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதற்காக, அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தால் 1.45 கோடி பைஸர் தடுப்பூசி டோஸ்களை கொள்வனவு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் இதன்போது தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் முன்கள பணியாளர்களைத் தொடர்ந்து, முன்னுரிமையின் அடிப்படையில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், 30 - 60 வயதுக்குட்பட்ட புற்றுநோய் உள்ளிட்ட பல் வேறு பிரச்சினைகளுடன் கூடியவர்களுக்கும், அதனைத் தொடர்ந்து ஏனைய பிரிவினருக்கும் இவ்வாறு 3ஆவது டோஸாக பைஸர் தடுப்பூ சியை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் பெற்றுக்கொண்ட தடுப்பூசியைக் கருதாது, உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆலோசனைக்கமைய, 3ஆவது டோஸாக பைஸர் தடுப்பூசியை வழங்கத் தீர்மானித்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.